விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 23 வியாழக்கிழமை (08.11.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 325

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## நாட்டின் அபிவிருத்திக்கு

## மாகாண சபைகளால் தடை

### இரத்துச் செய்யவேண்டுமென ஆலோசனை



மாகாண சபைகளை இரத்துச் செய்ய வேண்டுமென்று ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் மூத்த அமைச்சர்கள் இருவர் குரல் எழுப்பியுள்ளார்கள்.

நாட்டின் அபிவிருத்திக்கு மாகாண சபைகள் முறைமை தடையாக இருப்பதாகக் கூறி அதனை இரத்துச் செய்ய வேண்டும் என்று அந்தச் சந்திப்பில் அவர்கள் கூறியுள்ளனர்.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின், அமைச்சர் சம்பிக்க ரணவக்க மற்றும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ச ஆகியோர் இந்தக் கருத்தை முன்வைத்தனர்.

மாகாண சபைகளின் மூலம் நாடு கூட்டாட்சி முறைக்கு தள்ளப்படும் அபாயம் இருப்பதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க அங்கு கூறினார். (20ஆம் பக்கம் பார்க்க)

## 'திவி நெகும' சட்டமூலத்தில் திருத்தம்!

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய திவிநெகும சட்டமூலத்தை சட்டபூர்வமாக்குவதற்காக சர்வஜன வாக்கெடுப்பை நடத்தப் போவதில்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதற்குப் பதிலாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் சட்டமூலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த இது தொடர்பில் கருத்துரைக்கையில்,

உயர் நீதிமன்றம்,13ஆவது திருத்தப் பிரேரணையின்போது சர்வஜன வாக்கெடுப்புத் தீர்ப்பை வழங்காமல் திவிநெகும சட்ட மூலத்துக்கு சர்வஜன வாக்கெடுப்பு தீர்ப்பை வழங்கியுள்ளது. இது பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும் விடயமாக அரசாங்கம் கருதுகிறது.

எனவே திவிநெகும சட்டமூலத்தில் திருத்தங்களை செய்து அதனை சட்டபூர்வ மாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## இனப்பிரச்சினைத் தீர்வை உடன் வழங்க வேண்டும்

### -பேராயர் மல்கம் ரஞ்சித்

பிரதம நீதியரசருக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானம், அவரினால் வழங்கப்பட்ட தீர்ப்புகளுக்கு எதிரானதாக இருக்க முடியாதென கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அலுவலகம் தெரிவித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக, கொண்டு வரப்பட்ட அரசியல் குற்றப் பிரேரணைக்கு காரணம் அவர் தலைமையில் அரசுக்கு எதிராக தீர்ப்புகள் வழங்கப்பட்டமையை அடிப்படையாகக் கொண்டிருக்காது என அவ்வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

நீதிமன்றத்தின் சுதந்திரத்திற்கு பாதிப்பு ஏற்படும் எத்திட்டத்திற்கும் இடமளிக்கக் கூடாதென கொழும்பு பேராயரின் சமகால விசாரணைக் குழுவின் தலைவர் சிரில் காமினி பெர்ணான்டோ தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய தேவை இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு வழங்கப்பட வேண்டியதே என கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் சமகால விசாரணைக் குழு சுட்டிக்காட்டியுள்ளது. (எ-11)


## ஜனவரியில் வருகிறார் நவநீதம்பிள்ளை

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளையின் தலைமையிலான குழுவொன்று எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் குறித்து ஐ.நா.மனித உரிமைகள் ஆணையகத்தில், அமெரிக்காவால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எந்தளவுக்கு செயற்படுத்தப் பட்டுள்ளது (20ஆம் பக்கம் பார்க்க)

## ஒபாமா மீண்டும் அதிபரானார்



(வாஷிங்டன்)

பராக் ஒபாமா;இரண்டாவது முறையாக அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் முதல் கறுப்பு இன அதிபரான ஒபாமா, தான் மீண்டும் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தேவையான 270 வாக்குகளை விட கூடுதலான வாக்குகளைப் பெற்று , தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட குடியரசுக் கட்சி வேட்பாளர் மிட் ரோம்னியைத் தோற்கடித்திருக்கிறார்.

சிகாகோவில் தனது ஆதவ்ளர்களிடையே பேசிய ஒபாமா, மிட் ரோம்னியுடன் இணைந்து பணியாற்ற விரும்புவதாகத் தெரிவித்தார்.

அமெரிக்கப் பொருளாதாரம் கடுமையான நெருக்கடியைச் சந்தித்து வந்தபோதிலும், மிட் ரோம்னி கடுமையான போட்டியை ஏற்படுத்திய நேரத்திலும் ஒபாமா வெற்றி பெற்றிருக்கிறார்.

புளோரிடா மாகாண வாக்குகள் முடிபாகாத நிலையில், ஒபாமா 303 வாக்குகளைப் பெற்றிருக்கிறார். மிட் ரோம்னி 206 வாக்குகளை பெற்றிருக்கிறார்.

இந்த வெற்றியை அடுத்து, ஒபாமா (20ஆம் பக்கம் பார்க்க)

## வங்கக் கடலில் தாழமுக்கம்

வங்கக் கடலில் இலங்கை அருகே மன்னார் வளைகுடாப் பகுதியில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுநிலைபுதிதாகஉருவாகிஉள்ளதாகசென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் சமீபத்தில் உருவான காற்றழுத்ததாழ்வுநிலை வலுவடைந்து 'நீலம்' புயலாக மாறி, கடந்த 31-ம் திகதி தமிழகத்தின் மாமல்ல புரம் அருகேகரைகடந்தது. இதன் காரணமாக கடலோர மாவட் (20ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரப் பகிர்வுக் கொள்கைக்கு புலிகள் மீண்டும் வரவேண்டுமா?

### விமல் வீரவன்சவிடம் மனோ கேள்வி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்குப் பயந்துதான் அதிகாரப் பகிர்வுக் கொள்கை என்றால் இன்று அதிகாரப் பகிர்வைப் பெற்றுக் கொள்ள மீண்டும் புலிகள் வரவேண்டும் என அமைச்சர் விமல் வீரவன்ச சொல்கிறாரா? என மனோ கணேசன் கேள்வியெழுப்பியுள்ளார்.

புலிகளுக்குப் பயந்தே அதிகாரப் பகிர்வுக் கொள்கையும் மாகாண சபை முறைமையும், 13ஆம் திருத்தமும் கொண்டு வரப்பட்டது.

இன்று புலிகள் இல்லை. ஆகவே மாகாண சபையும் 13-ம் தேவையில்லை என நேற்றுக் காலை நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் விமல் வீரவன்ச சொல்லியிருப்பதாக அறிந்தேன். இது நல்ல வேடிக்கை என்கிறார் மனோ கணேசன்.

மேலும் மனோ கணேசன் தெரிவிக்கையில்,

இன்று தமிழ்த் தலைமைகள் நாம், ஐக்கிய இலங்கைக்குள்ளே தீர்வைக் கோருகிறோம். நேர்மையான அதிகாரப் பகிர்வு என்ற நிபந்தனையுடன் ஒன்றுபட்ட இலங்கையைக் கோருகிறோம். நாட்டைப் பிரிக்க வேண்டும் என நாங்கள் கேட்கவில்லை. ஆயுதப் போராட்டம் நடத்தவில்லை.

புலிகளுக்குப் பயந்துதான் அதிகாரப் பகிர்வு வந்தது என்று சொன்னால் என்ன அர்த்தம்?

அதிகாரப்பகிர்வு வேண்டும் என்றால் புலிகளை மீண்டும் கொண்டு வாருங்கள் என்றுதானே அர்த்தம். ஆகவே விமல் வீரவன்ச அதிகாரப் பகிர்வை பெறுவதற்காக ஆயுதப் போராட்டம் நடத்துங்கள் என்று எமக்குச் சொல்கிறார். (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியை ஏற்றுக்கொண்டு விடைபெற்றார் ரோம்னி!



(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் தேர்தலில் தனது தோல்வியை ஒப்புக்கொண்டார் குடியரசுக் கட்சி வேட்பாளர் மிட் ரோம்னி. அதிபர் ஒபாமாவிற்கு போனில் தன் வாழ்த்துக்களைத் தெரிவித்த ரோம்னி, இத்துடன் அரசியலிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

இந்தத் தேர்தலில் ஒபாமாவிற்கு 284 வாக்குகள் கிடைத்து விட்டன. அறுதிப் பெரும்பான்மையுடன் அவர் மீண்டும் அதிபராக தொடர்கிறார்.

மேலும் பாப்புலர் வாக்குகள் என்ற பிரிவில் ஒரு சதவீதம் பின்தங்கியிருந்த ஒபாமா இப்போது அதிலும் வென்றுவிட்டார். இந்த நிலையில் தோல்வியை ஒப்புக் கொண்டார் ரோம்னி.

இதனை தனது ஆதரவாளர்களுக்கும் தெரிவித்து தனக்காக வேலைபார்த்த அனைவருக்கும் நன்றிதெரிவித்தார்.

தொலைபேசியில் அதிபர் ஒபாமாவை அழைத்து வாழ்த்து தெரிவித்தார் ரோம்னி. முதல்பெண்மணி மிஷல் மற்றும் ஒபாமாவின் குழந்தைகளுக்கும் அவர் தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

அதிபர் ஒபாமா அடுத்த நான்கு ஆண்டுகள் அமெரிக்காவை சிறந்த வழியில் அழைத்துச்செல்வார் என நம்புவதாக அவர் தனது பேச்சின் போது குறிப்பிட்டார்.

அவருடன் துணை அதிபர் பதவிக்கு போட்டியிட்ட பால்ரயன், மனைவி ஆன் ரோம்னி மற்றும் ஆதரவாளர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

கட்சியடிப்படையில் பிளவுபடாமல் அமெரிக்கர்களாக ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அமெரிக்கா நன்றாக இருக்க வேண்டும் என்று தான் நான் போட்டியிட்டேன். கடவுள் அமெரிக்காவை காப்பற்றட்டும் என்றார் இறுதியாக.

ஆளுநராகவோ செனட் உறுப்பினராகவோ இல்லாததால் இந்தத் தோல்வியுடன் அரசி யலிலிருந்து ஓய்வு பெறுகிறார் ரோம்னி. (எ-11)

# காணிப் பிரச்சினை குறித்து ஐ.நா.அலுவலகம் கவனம்

(கொழும்பு)

இலங்கையின் வடக்கில் போரினால் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியமரும் போது எதிர்நோக்கும் காணிப்பிரச்சினைத் தொடர்பில் கவனம் செலுத்துவதாக கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகம் தெரிவித்துள்ளது.

மீள்குடியமரும் மக்கள் காணி, வீடு மற்றும் சொத்துக்கள் தொடர்பில் பாரிய சவால்களை எதிர்நோக்குகின்றனர். போருக்குப்பின்னர் ஆயிரக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் மீளத்திரும்பிய பலருக்கு காணி தொடர்பான ஆவணங்கள் இல்லை. எனவே அவர்களால் தமது காணிகளை வீடுகளை மீண்டும் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக மீள்குடியமர்ந்துள்ள குடும்பங்கள் தமது வாழ்க்கையை மீண்டும் ஆரம்பிப்பதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

நட்டஈடுகளைப் பெற்றுக்கொள்வதில் வீடுகளை திருத்தி அமைத்ததில் அவர்கள் பாரிய சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

இதனையடுத்து குறித்தப் பிரச்சினையை தீர்க்குமுகமாக ஐக்கிய நாடுகளின் கொழும்பு அலுவலகம், மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் உள்ள சுமார் 45 அரச பணியாளர்களுக்கு கணனிகள், பிரதியந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வழங்கியுள்ளதாக ஐக்கிய நாடுகள் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த அரச பணியாளர்களின் ஊடாக மீள்குடியமர்ந்தோர் தமக்குரிய ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்று அலுவலகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (எ-11)

# தமிழ் மக்களுக்கு எதிராக இராணுவம் போராடவில்லை

## சவேந்திர சில்வா விளக்கம்



(கொழும்பு)

இலங்கை இராணுவத்தினர் தமிழ் மக்களுக்கு எதிராக எந்தக்காலத்திலும் செயற்படவில்லையென ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் பிரதிவதிவிடப்பிரதிநிதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு விடயம் தொடர்பாக உகண்டாவில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளை தோற்கடிக்கும் நோக்கிலேயே யுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன தமிழ் மக்களுக்கு இராணுவத்தினர் உதவிகளை செய்துள்ளனர்.

இலங்கை, அபிவிருத்தி நோக்கி பயணிக்கும் ஆபிரிக்க நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது காலத்தின் தேவையாக உள்ளது.

புலிகளைத் தோற்கடித்த நாடு என்றவகையில் இலங்கைக்கு சர்வதேச மேடையொன்று அவசியம் எனவும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (எ-11)

# நிரந்தர வீட்டுத்திட்டத்தை வலியுறுத்தி புதுக்குடியிருப்பு மக்கள் ஆர்ப்பாட்டம்



(முல்லைத்தீவு)

தமக்கான நிரந்தர வீட்டுத்திட்டத்தைப் பெற்றுத்தரக்கோரி புதுக்குடியிருப்பு பிரதேச மக்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் ஒன்றுகூடிய சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இந்தப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

இதில் உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு தெற்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களே இந்தப் போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இதேவேளை, போராட்டக்காரர்களைச் சந்தித்த முல்லைத்தீவு அரச அதிபர் வேதநாயகம், 2013-ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு முன்னர் உரிய தீர்விணைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்தார். இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (எ-267)

# விபத்தில் இருவர் காயம்

(கரவெட்டி)

மோட்டார் சைக்கிள் – துவிச்சக்கர வண்டி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாய மடைந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று இரவு 7 மணியளவில் கரணவாய் கொலின்ஸ் மைதானத்தின் அருகே இடம் பெற்றுள்ளது. இதில் கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடியை சேர்ந்தவர்களான பாலசுப்பிரமணியம் அனுசாந் (வயது 23), கந்தபூர் கவிதாசன் (வயது 23) ஆகிய இருவரும் படுகாயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (எ-24)





## சுன்னாகம்-மயிலணி, திருக்குடவாயில் ஸ்ரீவிஸ்வநாத சுவாமி கோயில்

### யம சங்கார உற்சவம்

நாளை 09.11.2012 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும். அடியார்கள் அனைவரும் காலகாலனை தரிசித்து தீர்க்காயுள், ஆரோக்கியம் பெறுவீர்களாக.

(914) சுபம்

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

### WORKS ENGINEER (CIVIL) (ON ASSIGNMENT)

### WALK IN INTERVIEW

Application are invited from suitably gualified persons for the post of works Engineer (Civil) (on Assignment) for six months.

Candidates, who are interested in the above, are requested to present themselves for an interview with their CV and relevant documents on 14.11.2012 at 10.00 a.m in the Board Room of the University of Jaffna.

**QUALIFICATIONS**

(A) Should possess a B.Sc Engineering Degree specializing in civil Engineering from a recognized University / Higher Educational Institution or an Associate Member of a recognized Institute of Engineers

and

(B) A minimum of five (05) years of experience in the design, construction and Maintenance of Building, water supplies, drainage, road and electrical installation. Should also possess experience in handling contracts as well as managing direct labour.

**Salary Scale:** Fixed Salary Rs.45,000.00.

REGISTRAR,
University of Jaffna,
06.11.2012.

(சி-1457)

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்

- உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன் கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், உடுபுடைவைகள், CD, VCD க்கள் அனுப்பவும்
- உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும்

WESTERN UNION MONEY TRANSFER

Dialog தொலைபேசி அட்டைகள்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No:-0212225392
E.mail:-srimurugan09@gmail.com

(சி-1454)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அதுவாகி விடுங்கள்

ஒரு ஊரிலே ஞானி ஒருவர் இருந்தார். அவரைத் தேடி சிலபேர் போனார்கள்.

"என்ன சுவாமி... எப்படி இருக்கிறீர்கள்...?" என்று கேட்டார்கள்.

"நான் ஒரு சாதாரண வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறேன்" என்றார் அவர்.

"அப்படியென்றால் என்ன அர்த்தம்... உங்களின் கொள்கை என்ன?" என்று கேட்டார்கள்.

"என் கொள்கை இதுதான்... பசியெடுத்தால் சாப்பிடுவது... தூக்கம் வந்தால் நித்திரை செய்வது... அவ்வளவுதான்" என்று கூறினார்.

ஞானி இவ்வாறு கூறியதும் கேள்வி கேட்டவர்களுக்கு ஆச்சரியம். 'அத்தோடு சந்தேகம் வேறு... "என்ன இது... இவர் எவ்வளவு பெரிய ஞானி... அவர் இப்படி சாதாரணமாகச் சொல்கிறாரே... இவர்களுக்கோ எதுவுமே புரியவில்லை.

அதனாலே மறுபடியும் கேட்டார்கள்.

"என்ன சுவாமி இது... இப்படிச் சொல்கிறீர்கள்... நீங்கள் செய்யும் காரியங்களிலே எந்தத் தனித்தன்மையும் இருக்கிறதாகத் தெரியவில்லை!" என்றார்கள்.

"ஆமாம்... எந்தத் தனித்தன்மையும் கிடையாது... அதுதான் முக்கியம்" என்றார்.

கேள்வி கேட்டவர்களுக்கு திருப்தி ஏற்படவில்லை. அதனால் மறுபடியும் கேட்டார்கள்.

இதைக் கேட்டதும் ஞானிக்கு சிரிப்பு மேலிட்டது.

"எல்லோரும்தான் தூங்குகிறார்கள், சாப்பிடுகிறார்கள் என்று சொல்கிறீர்கள்... உண்மைதான். நானும்தான் செய்கிறேன். இருந்தாலும் எனக்கும் அவர்களுக்கும் வேறுபாடு உண்டு.

நீங்கள் சாப்பிடும் போது மனமானது சாப்பாட்டிலே இருக்காது. நடந்த விடயத்தையோ; நடக்கப் போகும் விடயத்தையோ நினைத்துக்கொண்டிருக்கும். உங்களின் மனம் எதை எதையோவெல்லாம் நினைத்து அலை பாயும். இல்லாவிட்டால் ஏதாவது கனவு கண்டு கொண்டிருப்பீர்கள்.

ஆனால், நான் அப்படியல்ல; நான் சாப்பிடும்போது அதை மட்டும் செய்கிறேன். வேறு சிந்தனை கிடையாது. தூங்கும்போது தூங்குவேன். எதைச் செய்கிறேனோ நான் அதுவாகி விடுகிறேன்... அது என் இயல்பு.

சாப்பிடும்போது நான் சாப்பாடாகி விடுகிறேன்; தூங்கும் போது நான் தூக்கமாகி விடுகிறேன்.

இதுதான் அடுத்தவர்களுக்கும் எனக்குமுள்ள வித்தியாசம் என்று அந்த ஞானி கூறினார்.

"செய்வதைச் சரியாகச் செய்வதே யோகம்" என்று சொல்கிறது கீதை.

நாம் செய்யும் தொழிலிலே ஒன்றிப் போய்விடும் போது அது தியானம் ஆகிறது. செய்யப்படுவதும் முழுமையாக அமைந்து விடும். அதுமட்டுமல்ல செய்யும் தொழிலின் சுமை, துன்பம் எதுவுமே தெரியாது என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தேவிபுரம் அ.த.க.பாடசாலையின் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை

## பெற்றோர் விசனம்

(முல்லைத்தீவு)

மு/தேவிபுரம் அ.த.க. பாடசாலை பல தேவைகளுடன் இயங்கி வருவதாக பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 1964 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இப்பாடசாலை மீள் குடியேற்றத்தின் பின் கடந்த 2011 ஆம் ஆண்டு தனது கல்வி நடவடிக்கையை ஆரம்பித்து 200 மாணவர்களுடன் இயங்கி வருகின்றது. இப்பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இன்றுவரை வரலாறு, சமயம், நடனம், உடற்கல்வி, தகவல் தொழில்நுட்பம், 2 ஆம் மொழி ஆகிய பாடங்களுக்கு நிரந்தர ஆசிரியர் இன்மையால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இது புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் மிகவும் பின்தங்கிய வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட பாடசாலையாகும். மின்சார வசதியின்மையால் மின்சாரத்தின் ஊடாக செயற்படுத்தப்படும் அனைத்து வேலைகளும் ஸ்தம்பிதம் அடைந்து காணப்படுகின்றது.

அத்துடன் பிரார்த்தனை மண்டபம், விஞ்ஞான ஆய்வுகூட வசதி, நடனம், சங்கீதம், மனையியல் ஆகிய பாடங்களுக்கான செயற்பாட்டறை ஆகியவை இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை மாணவர்கள் கல்வி பயிலும் இப் பாடசாலையில் வகுப்பறை வசதியின்மையால் மாணவர்கள் சுதந்திரமாக கல்வி கற்க முடியாத நிலை காணப்படுகிறது.

எட்டு கணனி வசதி காணப்படுகின்ற போதும் கணனி அறை இன்மையால் பெரும் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. பாடசாலையை சுற்றியுள்ள சுற்றுவேலி சீரின்மையால் கால்நடைகள் பாடசாலையை அசுத்தம் செய்கின்றன.

மின்பிறப்பாக்கி கூட இப்பாடசாலையில் இல்லை. நூலகம் காணப்படுகின்றபோது அந்நூலகம் போரினால் முற்றாக சேதமடைந்து காணப்படுகின்றன. நூல்களும் போதியளவு இல்லை.

இப்பாடசாலைக்கு செல்கின்ற பிரதான வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் போக்குவரத்து செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

தேவிபுரம் சந்தியில் இருந்து பாடசாலைக்கு வருவதற்காக 6 கிலோமீற்றர் தூரத்திற்கு தனியார், அரச பேருந்துகள் இன்மையால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

75 மாணவர்கள் தூர இடத்தில் இருந்து நடந்தே பாடசாலைக்கு வருகின்றனர். அவர்களுக்கு துவிச்சக்கரவண்டி கூட இல்லை.

இப்பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் உண்டு. ஆனால், அது செப்பனிடப்படவில்லை. எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாணவர்களது பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-267)

# இராசி பலன்

*08.11.2012*
*(ஐப்பசி 23, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு*
*நவமி பிற்பகல் 1.51 மணிவரை*
*மகம் முன்னிரவு 7.49 மணிவரை*
*இராகுகாலம் 1.35-3.05 மணிவரை*
*சுபநேரம் 7.35-9.05 மணிவரை*
*அமிர்த சித்தம்.*

**மேடம்**

அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், இனிமையான நாள், பிள்ளைகளால் பெருமையடைவீர்கள், ஆழ்ந்த சிந்தையுண்டு, வியாபார விருத்தியுண்டு.

**இடபம்**

வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும், தாய் வழி உறவில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரும் நாள், விருந்தினர் வருகையுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்**

நல்லவர்கள் தொடர்பால் நலன் காணும் நாள், குறை கூறுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்**

உங்கள் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் வந்து சேரலாம், மாதர் நட்புண்டு.

**சிங்கம்**

விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.

**கன்னி**

அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், தொழிலில் சில மாற்றங்கள் ஏற்படலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும், சயன சுகக் குறைவான நாள், பிதா சிந்தையுண்டு.

**துலாம்**

எதிர்கால வெற்றிக்கு திருப்புமுனையான நாள், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வருவர், பணப்புழக்கம் அதிகரிக்கும், இறை பக்தி அதிகரிக்கும்.

**விருச்சிகம்**

தொழில் வளர்ச்சி கூடும் நாள், தொட்ட காரியங்களில் எளிதில் வெற்றி பெறுவீர்கள், வங்கி சேமிப்புக்கள் உயர்வடையும், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு**

தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றும் நாள், உதாசினப் படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும்.

**மகரம்**

கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கப்படலாம்.

**கும்பம்**

இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், இல்லத்தாரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், மதி நுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள்.

**மீனம்**

உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**வளவன்**

# ஓவியச் சாளரம் கண்காட்சி

யாழ்ப்பாணம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஓவிய மன்றம் நடத்தும் **ஓவியச் சாளரம்** என்னும் கண்காட்சி எதிர்வரும் 10, 11 ஆம் திகதிகளில் முற்பகல் 9 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் சிறுவர் சித்திரங்கள் எனும் பகுதி மாணவர்களின் கருத்து வெளிப்பாடு பொருட்கூட்டம், பிரதிமை என்பன நீர்வர்ணம், பஸ்ரல் எண்ணெய் வர்ணம், அக்ரலிக் பஸ்ரல் பேனா, பென்சில் ஆகியவற்றை கொண்டு வரையப்பட்ட சித்திரங்கள், புடைப்புச்சித்திரம் மற்றும் பொருத்துகை காண்பியல் கலைகள் என பல்வேறு பிரிவுகளில் காட்சிப்படுத்தப்படவுள்ளன. (அ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 130 | 150 |
| உருளைக்கிழங்கு | 120-160 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 90 | 130 |
| தக்காளி | 90 | 60 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 90 | 70 | 100 |
| கரட் | 80 | 100 | 160 |
| பூசணி | 40 | 35 | 50 |
| புடோல் | 90 | 60 | 120 |
| வாழைக்காய் | 60 | 40 | 80 |
| சின்ன வெங்காயம் | 50-80 | 50 | 80 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 80 |
| பாகற்காய் | 240 | 120 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | 90 | 60 | 80 |
| பயற்றங்காய் | 120 | 120 | 180 |
| லீக்ஸ் | 110 | 70 | 110 |
| பீற்றூட் | 40 | 40 | 90 |
| கறிமிளகாய் | 150 | 80 | 160 |
| முருங்கைக்காய் | 120 | 40 | 80 |
| போஞ்சி | 230 | 70 | 240 |
| கத்தரிதம்புள்ள | 180 | 80 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 200 | 220 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 30-35 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆற்றங்கரை மரக்கிளைகளால் நிறைகிறது

## நடவடிக்கை எடுக்கக்கோரிக்கை

(உடுப்பிட்டி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்குப் பின்புறமாகவுள்ள ஆற்றங்கரையோரத்தின் ஒரு பகுதியில் வெட்டிய மரக்கிளைகள் போடப்பட்டு வருவதாக பக்த அடியார்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.


அப்பகுதி வீடுகளில் காணப்படும் மரங்களை வெட்டி அங்கே போடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெட்டிய மரக்கிளைகள் குவிக்கப்படுவதால் சுகாதார சீர்கேடு காணப்படுவதாக அங்கு நீராட்ச் செல்லும் பக்தர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியானது பிதிர்க்கடன் செய்யப்படும் இடம் என்பதால் இக்கிரியைகளை மேற்கொள்ள வருபவர்களுக்கு பெரும் இடையூறாக காணப்படுகிறது.

அத்துடன் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சுகாதாரப் பிரிவினர் தொண்டைமானாறு பகுதியில் வீடு வீடாகச் சென்று டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு வீடுகளைத் தரிசித்துச் செல்லும் இவர்களுக்கு சந்நிதி ஆற்றை கவனத்தில் எடுக்க மறக்கின்றனர் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் ஆற்றினை சுத்தமாக வைத்திருப்பதற்கு வழி செய்யுமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-52)




# போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும் இயல்பு நிலைக்கு திரும்பவில்லை

## சமாதான பேரவை உறுப்பினர்களிடம் வணிகர்கழக தலைவர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பவில்லை என யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த சர்வமதப் பேரவை உறுப்பினர்களிடம் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் உறுப்பினரும் யாழ்.வணிகர் கழகத்தின் தலைவருமான ஆர்.ஜெயசேகரன் முறையிட்டுள்ளார்.**



அகில இலங்கை சர்வமத சமாதானப் பேரவையின் தலைவர் பெல்லாவல விமலரட்ன தேரர் தலைமையில் யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த சமாதானப் பேரவை உறுப்பினர்களுடன் யாழ்.வணிகர் கழகத்தின் மாநாட்டு மண்டபத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள சர்வமதத் தலைவர்கள் மற்றும் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவினர் சந்தித்து கலந்துரையாடினார்கள். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல அழிவுகளை எதிர்கொண்ட யாழ்ப்பாணத்தில் சர்வமத பேரவை உறுப்பினர்கள் வந்து கலந்துரையாடுவதற்கு நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழல் முக்கிய காரணம்.

கடந்த காலத்தில் பல துன்பங்களை எதிர்கொண்ட நாட்டில் சமாதானம் ஏற்பட்டுள்ளது. ஆனால், போரினால் ஏற்பட்ட பாதிப்புக்களிலிருந்து இன்னும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் விடுபடவில்லை. யுத்த வடுக்களிலிருந்து அந்தக் குடும்பங்கள் விடுபட சர்வமதத் தலைவர்கள் உதவ வேண்டும்.

போரினால் ஏற்பட்ட பாதிப்புக்களிலிருந்து விடுபட்டு இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப வேண்டும். அவர்களுக்கு சொந்தமான வீடுகள், காணிகள் இராணுவக்கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும்.

இடம்பெயர்ந்து முகாம்களிலும் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளவர்கள் சொந்த இடத்திற்கு சென்று குடியேற முடியாதுள்ளனர். அத்தோடு தமது மதத்தினை சுதந்திரமாக பின்பற்ற முடியாதுள்ளனர். பிரதேசத்திற்கு பொருத்தமில்லாத, அந்த மதத்தினை சார்ந்தவர்கள் வாழாத பகுதிகளில் மதச் சின்னங்களை கொண்டு வந்து மத முரண்பாடுகளை ஏற்படுத்துகின்றனர்.

இதுதவிர யுத்தத்தால் எல்லாவற்றையும் இழந்த நிலையில் வறுமையில் வாழும் குடும்பங்களை அவர்களின் வறுமையைப் பயன்படுத்தி மதமாற்றும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் இந்த நாட்டில் யுத்தம் ஏற்படுவதற்கு காரணமாகவிருந்த நிலைமைகளைப் போக்குவதற்கு இலங்கை அரசாங்கம் திறந்த மனத்துடன் எந்தவித நடவடிக்கையினையும் முன்னெடுக்கவில்லை.

யுத்தத்திற்கான காரணத்தை கண்டறிந்து நிரந்தர சமாதானத்தை இந்த நாட்டில் ஏற்படுத்த வேண்டும். சகல இன மக்களுக்கிடையிலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும். மேலும் யாழ்ப்பாணம், கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம், தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாழ்கின்றனர். ஆனால், முஸ்லிம் அரசியல்வாதிகள் அதனை குழப்புகின்றனர்.

முஸ்லிம், தமிழ் மக்களிடையே முரண்பாட்டை ஏற்படுத்துகின்றனர் எனத் தெரிவித்ததோடு நாட்டில் நீடித்து நிலைக்கக்கூடிய சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தி ஆசியாவின் ஆச்சரியம் மிக்க நாடாக இலங்கையை மாற்ற வேண்டும். அதற்கு அகில இலங்கை சர்வமத சமாதானப் பேரவை உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த சமாதானப் பேரவையின் குழுவில் அகில இலங்கை சர்வமத சமாதானப் பேரவையின் உறுப்பினரும் இந்து சமய விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் இணைப்பாளருமான பாபு சர்மா, அமெரிக்காவின் சமாதான பேரவையின் பிரதிநிதியான சுகிலோ, ஜப்பான் நாட்டின் சமாதானப் பேரவையின் பிரதிநிதி சக்காய், ஐரோப்பிய சமாதானப் பேரவையின் பிரதிநிதி ஸ்ரெயின் வின்சன், மத்திய மாகாண ஆயர் கண்டி பிசன் மற்றும் பௌத்த பிக்குகள், இஸ்லாமிய மௌலவிகள், கிறிஸ்தவ மதகுருமார், இந்து மதகுருமார் எனப்பலரும் வருகை தந்திருந்தனர்.

இதேவேளை, சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, குழுவின் செயலாளர் எஸ்.பரமநாதன், மதகுருமார் உள்ளிட்ட பலர் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். (அ-6)




# கிடங்குகள் நிரவப்படாததால் வீதியில் பயணிக்க முடியவில்லை

## பயணிகள் ஆதங்கம்

நிலாவரையில் இருந்து இராசவீதிக்கு செல்லும் பிரதான வீதியின் அகலமாக்கும் பணிக்காக வெட்டப்பட்ட கிடங்குகள் நீண்ட காலமாக நிரவப்படாமையால் அவ் வீதியால் செல்லும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நிலாவரையில் இருந்து சிறுப்பிட்டிவரை வீதி அகலிப்பு பணிக்காக வெட்டப்பட்ட கிடங்குகளை ஒப்பந்தகாரர்கள் நிரவாமல் விட்டுச் சென்றமையால் அவ்வீதியால் செல்லும் பயணிகள் விபத்துக்குள்ளாகின்றனர்.

அத்துடன் மழை காலங்களில் அக்கிடங்குகளில் நீர் தேங்கி நின்று பயணிகள் மீது அழுக்குகளை தெளிக்கின்றது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பலமுறை கோரிக்கை விடுத்தும் அவர்கள் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-3-24)

# கிராமிய வங்கிகளில் ஓய்வூதியம் பெறலாம்

(சாவகச்சேரி)

கிராமிய வங்கிகளில் ஓய்வூதியர்களது உறுதிச்சிட்டைகளை (வவுச்சர்களை) வழங்குமாறு சகல பிரதேச செயலகங்களுக்கும் ஓய்வூதிய திணைக்களத்தினால் அறிவித்தல் வழங்கப் பட்டுள்ளது.

கிராமிய வங்கிகளில் முன்னர் ஓய்வூதியம் பெற்றோர் ஒன்லைன் சேவை உள்ள வங்கிகளில் கணக்குகளை ஆரம்பித்து அந்த வங்கிகள் ஊடாக ஓய்வூதியங்களைப் பெற வேண்டுமென முன்னர் ஓய்வூதிய திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் ஓய்வூதியர்கள் இதனை எதிர்த்து ஓய்வூதியர் திணைக்களத்திற்கும் பிரதேச செயலகங்களுக்கும் முறையிட்டதனைத் தொடர்ந்து இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஓய்வூதிய திணைக்களத்தினருடன் கலந்துரையாடலை நடத்தியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து கிராமிய வங்கிகளில் கணக்கு வைத்துள்ள ஓய்வூதியர்கள் தொடர்ந்தும் கிராமிய வங்கிகளிலேயே தமது ஓய்வூதியங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு ஓய்வூதிய திணைக்களத்தினால் அறிவிக்கப் பட்டுள்ளது. (அ-3-28)

# செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் சுகாதாரமும் உடற்கல்வியும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரணி ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (அ-3-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- புரட்டாதி 2<br>உயரம்:- 5'3"<br>கி.பா:-25.75<br>தகைமை:-BA(Hons)<br>B/667 | பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அவிட்டம் 2<br>கி.பா:-75, 8 இல் செவ்வாய்<br>தொழில்: Bsc அரச ஊழியர்<br>G/669 |
| பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- திருவோணம் 3<br>உயரம்:-5'5"<br>கி.பா:-36<br>தொழில்:-A/L கடை உரிமையாளர்<br>B/668 | பிறப்பு:-1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- மிருகசீரிடம் 4<br>உயரம்: 5'<br>கி.பா:-15.75<br>தகைமை:-AL<br>G/670 |
| பிறப்பு:- 1977 இந்து<br>நட்சத்திரம்:-உத்தராடம் 3<br>உயரம்:-5'10"<br>கி.பா:-45.25<br>தகைமை:-பொறியியலாளர் (மொறட்டுவ)<br>B/373 | பிறப்பு:-1987 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>உயரம்: 5'3"<br>கி.பா: 29.25<br>தகைமை:- AL பினான்ஸ் கம்பனி (தனியார்)<br>G/389 |
| பிறப்பு:- 1972 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-ரேவதி<br>உயரம்:-5'8"<br>கி.பா:-28.25, 2 இல் செவ்.<br>தகைமை:- Bsc Dip in Edu msc (Hons)<br>B/374 | பிறப்பு:- 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பூராடம் 1<br>உயரம்:-5'5"<br>கி.பா: 6.5<br>தகைமை:- Bsc விவசாய இணைப்பாளர்<br>G/391 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல.144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி

## தனது சகோதரின் அதிகாரத்தை வலுப்படுத்தவே ஷிராணி மீது குற்றச்சாட்டு

### அரசைச் சாடுகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

சகோதரர் ஒருவரின் அதிகாரத்தை வலுப்படுத்தும் நோக்கில் பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்களின் பிரச்சினைகளுக்காக இந்தக் குற்றப் பிரேரணை முன்வைக்கப்படவில்லை. அரசாங்கத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே இந்தப் பிரேரணை முன்வைக்கப்படுகின்றது.

நீதிமன்றின் சுயாதீனத்தன்மையை உறுதி செய்ய முழு அளவில் போராட்டங்கள் நடத்தப்படும். குற்றப் பிரேரணையின் உண்மை நிலைமையை அரசாங்கம் மூடி மறைத்துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் நீதிமன்றின் சுயாதீனத்தன்மையை இரையாக்கிக் கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அனுமதிக்காது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளினால் பின் விளைவுகளை எதிர்நோக்க நேரிடும் என அவர் தெரிவித்தார். (அ-2)

**Cambridge Management College**

புதிய பிரிவுகள் ஆரம்பம்:- 03.11.2012

யாழில் முதன்முறையாக UK இல் இருந்து வருகை தந்துள்ள ஆங்கிலேயர்களால் ஆங்கிலம் New Method இல் கற்பிக்கப்படுகின்றது.



Mr. Rob Horne
M.Phil in English
Qualified Cambridge Uni Examiner



Ms. Janette Smith
Master of Education (English)

பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருக்கும் மாணவர்களுக்கான தனியான பிரிவு ஆரம்பமாகின்றது. உங்கள் பல்கலைக்கழக கல்வியை சிறந்த ஆங்கில அறிவுடன் தொடர வேண்டுமா? உங்கள் பதிவுகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

Cambridge Management College
இல. 23, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம், [கச்சேரி பஸ்நிலையம் அருகில்]
தொ.பேசி : 0777740999, 0212221818
Email-cmcjaffna@gmail.com

## சர்வமத பேரவையின் அங்குரார்ப்பண நிகழ்வு

(கிளிநொச்சி)

கொழும்பை தலைமையகமாக கொண்டு செயற்பட்டு வரும் சமயங்களின் சமாதான பேரவையின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு கனகபுரத்தில் அமைந்துள்ள செல்வா றெஸ்ரோரன்ஸ் மண்டபத்தில் வணக்கத்துக்குரிய பெல்லான் விலா விமலரட்ண தேரர் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கண்டி பேராயர் வியானி பெர்னாண்டோ, இராமசந்திர குருக்கள் பாபு சர்மா , கல்முனை மௌலவி ஆதம்பாவா மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகளான கௌரவ சுகினோ, ஜப்பான் நாட்டு கௌரவ சக்காய், ஐரோப்பிய நாட்டு விலும்ஸ்றென் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3)





**காவேரி சில்க்ஸ்**

திருமணப்பட்டுப்புடைவைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்

பாரம்பரிய பட்டுக்களின் பரந்த சோலை

அதிரடி மலிவு விற்பனை

தீபாவளியை முன்னிட்டு இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அனைத்துத் தரப்பினருக்குமான நவீன ஆடை வகைகள் சிறப்பு மலிவு விலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

10% 20% 30% வரை தள்ளுபடி





காவேரி சில்க்ஸ்
48, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2333


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா பிரதேச செயலகத்தினுள் புகுந்து பிரதேச செயலாளரை தாக்க முற்பட்டதாக தெரிவித்தும் அவ்வாறான செயற்பாடுகளை கண்டித்தும் வவுனியா பிரதேச செயலக ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களையும் பொலிஸார் அவர்களுடன் உரையாடுவதையும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

# ஷிராணிக்கு எதிராக 14 குற்றச்சாட்டுக்கள்

## 117 எம்.பிக்கள் கையெழுத்திட்டனர்

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவுக்கு எதிரான 14 குற்றச்சாட்டுக்கள் உள்ளடக்கப்பட்ட பிரேரணை நேற்று முன்தினம் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட மேற்படி பிரேரணையில் கையெழுத்திட்டுள்ள 117 பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பெயர்களும் அன்றைய தினம் ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்க மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தி அவற்றில் ஒன்று அல்லது அதிகமானவை நிரூபிக்கப்பட்டுள்ளதாக தெரிவுக்குழு பாராளுமன்றத்திற்கு அறிக்கை அளிக்கும் பட்சத்தில் பிரதம நீதியரசரை நீக்குவதற்கான பிரேரணையை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கக்கூடிய வகையில் தெரிவுக்குழுவொன்றை அமைக்குமாறு கோரியே சபாநாயகரிடம் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவை வருமாறு,

குறிப்பாக துர்நடத்தை அல்லது பிரதம நீதியரசர் பதவியை வகிப்பவருக்கு தகாத விதத்திலான நடத்தை உறுதி செய்யப்படுவதாலும் நீதிமன்றங்களில் வழக்கு நடவடிக்கைகளுக்கு உள்ளாகக்கூடியதான விடயங்கள் தொடப்பிலான வினா எழுப்புதல்களுக்கு அல்லது கருத்து வேறுபாடுகளுக்கு உள்ளாகக் கூடியதான விடயங்கள் தொடர்பில் ஏற்புடையதான மற்றும் ஏற்புடையதாகக் கூடிய விடயங்கள் தொடர்பில் செயலாற்றியுள்ளார் என்பதாலும் நீதி நியாயம் வழங்குதல் தொடர்பில் நிர்ப்பந்தங்களை செய்துள்ளார் என்பதாலும் வழக்கு தரப்பினர் பக்கச் சார்பு மற்றும் பக்கச்சார்பற்றது தொடர்பிலான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கு வாய்ப்புள்ளதான ஏதுக்கள் உருவாகலாம் என்பதாலும் முழுமையான உச்சநீதிமன்றத்தையும் குறிப்பாக பிரதம நீதியரசர் பதவியையும் அவமதிப்புக்கு உள்ளாக்கியுள்ளார் என்றும் அவர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

★ அவுஸ்திரேலியாவிலுள்ள இருவர்சொகுசு வீடுகளை வாங்க எங்கிருந்து பணம் கிடைக்கப்பெற்றது.

★ பிரதம நீதியரசர் சொத்துக்கள் பற்றிய விபரங்களை அறிவிக்கவில்லை.

★ 20 இற்கும் மேற்பட்ட வங்கி வைப்புக்கள்.

★ கணவன் மீதான இலஞ்ச ஊழல் வழக்கின் ஆவணங்களை பார்க்க அதிகார துஷ்பிரயோகம்.

★ தகுதியுள்ளோரை புறக்கணித்து மஞ்சுள திலகரட்னவுக்கு நியமனம்.

★ அரசியல் சாசனத்தை உதாசீனம் செய்து சபாநாயகருக்கு அனுப்பும் தீர்ப்பை பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு அனுப்பினார்.

★ பெண் நீதவான் திருமதி கமகே பொலிஸ் அதிபரிடம் பாதுகாப்பு கோரியதற்காக அவரை தண்டிக்க எத்தனித்தார்.

★ நீதித்துறையில் தனது செல்வாக்கை பயன்படுத்தி அதிகார துஷ்பிரயோகம்

★ பிரதம நீதியரசருக்கு ஒவ்வாத செயற்பாடுகளில் ஈடுபட்டார்.

★ நீதித்துறை மீது மக்களுக்கு இருந்த நம்பிக்கையை சீர்குலைத்தார்.

★ துர்நடத்தை அல்லது பிரதம நீதியரசருக்கு தகாத விதத்தில் செயற்பட்டதனால் இந்த பதவியை வகிப்பதற்கு தகுதியை இழந்துள்ளார் என்றுள்ளது. (அ-2)

# தமிழர் தாயக ஆக்கிரமிப்புக்கு எதிராக உலக தமிழர்கள் போராடுவர்

## நாடு கடந்த தமிழீழ அரசின் தலைவர். உரை

அனைத்து வழிமுறைகளிலும் தமிழர் தாயகத்தை இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் கொண்டு வந்துள்ள இலங்கை பேரினவாத அரசாங்கம் அமைப்பியல் நிலைப்பட்ட இன அழிப்பினை மேற்கொண்டு வருகின்றது என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் ருத்ரகுமார் தெரிவித்துள்ளார்.

நோர்வேயில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் கூறியவை வருமாறு,

தமிழீழ விடுதலைக்கான ஜனநாயகப் போராட்டப் பாதையில் உலகத் தமிழ் மக்களையும் நீதிக்குக் குரல் கொடுக்கக்கூடிய சிவில் சமூகத்தையும் ஒருங்கிணைத்துச் செயற்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து வழிமுறைகளிலும் தமிழர் தாயகத்தை இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் கொண்டு வந்துள்ள இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் அமைப்பியல் நிலைப்பட்ட இன அழிப்பினை தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு அனைத்துலக சமூகத்திற்கு உண்டு.

தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசினால்மேற்கொள்ளப்படுவது இனப்படுகொலை என்பதை நிரூபிப்பதற்கான வேலைத்திட்டங்கள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டும். அதனூடாகவே சுதந்திரத் தனியரசை அமைப்பதற்கான தமிழ் மக்களின் உரித்தினை நிறுவ முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான அரசியல் நிதானமானதாகவும் அதேவேளை காத்திரமானதாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும். நாடுகடந்த அரசாங்கமென்ற இந்த ஜனநாயக முயற்சிக்கு வெளிப்படையான விவாதங்கள் பலமானதாக அமையுமெனவும் குறிப்பிட்டார். (அ-2)

### மாணவர்களுக்கான விசேட சந்திப்பு

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இயங்கி வருகின்ற தேசிய கல்வி நிறுவக கல்விமாணி கற்கை நிலையத்தில் கல்விமாணி பயிற்சி நெறியினை மேற்கொண்டுவரும் முதலாம் வருட அனைத்து மாணவர்களுக்கான விசேட சந்திப்பொன்று இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி கல்லூரிக் கலையரங்கில் நடைபெறுமென இணைப்பாளர் செ.சேதுராஜா அறிவித்துள்ளார். எனவே, அனைத்துப் பயிற்சி ஆசிரியர்களையும் இச் சந்திப்பில் தவறாது சமூகமளிக்குமாறு அவர்கேட்டுள்ளார். (அ-2)

### அன்னாபிஷேகம்

யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலமைந்துள்ள சீரடி சாயி மந்திர் பாபாவுக்கு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அன்னாபிஷேகம் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து ஸ்ரீ குரு பாதுகாஸ் தோத்திரமும் ஆரத்தியும் நடைபெறும். இலங்கையில் முதன் முதலாக ஸ்ரீ சீரடி சாயி பாபாவுக்கு நடைபெறவுள்ள இவ்வபிஷேகத்தில் நாட்டில் ஏற்படும் பசி பிணி பஞ்சம் நீங்க பிரார்த்தனைகள் நடைபெறவுள்ளன. (அ-9)

### தாவடி

### ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

### சமய அறிவு விருத்திப் பரீட்சை- 2012

### பரிசளிப்பு விழா

நாள் :- 10.11.2012 சனிக்கிழமை

நேரம் :- மாலை 4.00 மணி

இடம் :- ஆலய மண்டபம்

பிரம்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ. வ.சிவகுமாரசர்மா அவர்கள் தலைமையில் விழா நடைபெறும்.

பரிசில் விபரம்

சுட்டெண்

| பரிசு | தரம் 6 | தரம் 7 | தரம் 8 | தரம் 9 | தரம் 10 |
|---|---|---|---|---|---|
| 1 ஆம் | 625 | 571 | 1442 | 748 | 543 |
| 2 ஆம் | 991 | 1301 | 1253 | 1456 | 547 |
| 3 ஆம் | 1198 | 623 | 1185 | 1470 | 551 |
| 4 ஆம் | | 607 | 1396 | 1485 | 1476 |
| 5 ஆம் | | 1241 | 1393 | 863 | 1450 |
| 6 ஆம் | | 536 | 1467 | 1454 | 550 |
| 7 ஆம் | | 620 | 1471 | 753 | 528 |
| 8 ஆம் | | 967 | 627 | 1313 | 1284 |
| சான்றிதழ் | | 613 | 628 | 557 | |
| | | 1056 | 629 | 561 | |
| | | 624 | 937 | 593 | |
| | | 608 | | 1383 | |
| | | 614 | | 946 | |
| | | 903 | | 1027 | |
| | | 902 | | 1028 | |
| | | 1066 | | 1453 | |
| | | 1311 | | | |
| | | 1386 | | | |
| | | 1335 | | | |
| | | 1395 | | | |

பிரம்மஸ்ரீ நா.சசிதரசர்மா
(ரவி ஐயா)
ஆதீன கர்த்தா

(909)

# நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் திருத்தங்கள் செய்யப்படும்

## திவிநெகும குறித்து அமைச்சர் சுசில்

(கொழும்பு)

திவிநெகும சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பின் பிரகாரம் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டிய தேவையில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் திவிநெகும சட்டமூலம் நாடாளுமன்றத்தின் போது அரசியலமைப்பு அமைவாக உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளின் பிரகாரம் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

# இணைப்பாளர்களுக்கு கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்க யாழ்.மாவட்டத்தின் பிராந்திய இணைப்பாளர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நெல்லியடி கிறிஸ்ரல் கல்வி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாவட்ட பொதுக்கூட்டம் தொடர்பான முடிவு எடுக்கப்படவுள்ளதால் பிராந்திய இணைப்பாளர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட இணைப்பாளர் அறிவித்துள்ளார். தம்முடனான தொடர்புகளுக்கு 077 8445[illegible] என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளார். (அ-3-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பார்க்காத முடிவை எடுப்பாராம் ஹிருணிகா

(கொழும்பு)

தாம் இதுவரையில் யாரும் எதிர்பார்க்காத முடிவை எடுக்கப்போவதாகவும் விரைவில் திருப்பு முனை தீர்மானம் ஒன்றை அறிவிக்கவுள்ளதாகவும் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

தமது தந்தையாரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர கொல்லப்பட்டமை தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

இதன்போது இந்தக் கொலையின் சந்தேக நபரான துமிந்த சில்வாவுக்கு மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் மூளை சத்திரசிகிச்சையின் போது அகற்றப்பட்ட சில பகுதிகள் குறித்து மன்றில் அறிக்கை தருமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதனையடுத்து நீதிமன்றத்துக்கு வெளியில் வைத்து செய்தியாளர்களை சந்தித்து ஹிருணிகா தாம் பாரத லக்ஸ்மனின் ஒரேமகள். எனவே தந்தையின் மரணத்தை காட்டிக் கொடுக்கப்போவதில்லை என்று குறிப்பிட்டார்.

எனவே கொலன்னாவை மக்களிடம் ஆதரவுடன் விரைவில் திருப்பு முனை தீர்மானம் ஒன்றை அறிவிக்கவுள்ளதாக ஹிருணிகா தெரிவித்தார். (அ-2)

# முச்சக்கரவண்டிகளுக்கு பதில் உலங்குவானூர்தி?

## புழுகினார் சூரிய எம்.பி.

(கொழும்பு)

இலங்கையில் இன்னும் ஐந்து வருடங்களில் முச்சக்கர வண்டிகள் இல்லாமல் போய்விடுமென ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஆர்.பி. சூரியபெருமவே இந்த கருத்தை முன் வைத்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். மேலும் தெரிவிக்கையில் ,

இன்னும் ஐந்து வருடங்களில் நாட்டில் முச்சக்கரவண்டி இருக்காது. இதற்கு பதிலாக சிறிய ரக உலங்குவானூர்திகளை இறக்குவோம்.

உலங்குவானூர்தி மூலம் கடைக்குச் சென்று வீடு திரும்பும் மக்கள் தமது வீட்டின் கூரையின் மேல் இறக்கும் காலம் வெகு விரைவில் வரும்.

கொழும்பில் 200 உலங்குவானூர்திகள் இருக்கின்றன. இவை சூரிய வெளிச்சத்தை மறைப்பதால் துணிகளை காய வைக்க முடியாது என பெண்கள் அழுவதாக அவர் கூறியுள்ளார். (அ-2)

# கே.பிக்கும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளது

## பிரதியமைச்சர் முரளிதரன் கூறுகிறார்

(கொழும்பு)

குமரன் பத்மநாதனுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றது என மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் 12 ஆயிரம் போராளிகள் சரணடைந்தார்கள். இவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டதுடன் பலருக்கு பொது மன்னிப்பும் வழங்கப்பட்டது. இதன் அடிப்படையிலேயே குமரன் பத்மநாதனுக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி புலிகளுடன் இரகசிய ஒப்பந்தம் செய்து ஆயுதங்களை வழங்கியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரத்திற்கு நேரம் தமது நிலைப்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றது என முரளிதரன் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# இலங்கையை சர்வதேசம் பாராட்ட வேண்டுமாம்

## பாகிஸ்தான் கூறுகிறது

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் காலமீளாய்வு அமர்வுகளில் கலந்து கொண்ட பாகிஸ்தான் பிரதிநிதி இலங்கையை சர்வதேச நாடுகள் பாராட்ட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத்தை இல்லாதொழித்தது. இந்த வெற்றி தொடர்பில் உலக நாடுகள் இலங்கையை பாராட்ட வேண்டுமென கோரியுள்ளார்.

இலங்கையின் போர் வெற்றியை ஏற்றுக் கொள்ள வேண்டுமென கோரிய ஒரே நாடாக பாகிஸ்தான் திகழ்கின்றது. (அ-2)




★ 1520-டென்மார்க் படைகள் சுவீடனை முற்றுகையிட்டன. சுமார் 100 பேர் வரையில் உயிரிழந்தனர்.

★ 1811-இலங்கையில் இயற்றப்பட்ட புதிய நீதிமன்ற சட்டப்படி மேல் நீதிமன்றம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஒன்று கொழும்பில் பிரதம நீதியரசரின் நீதிமன்றமும் Puisne Justice என அழைக்கப்படும் நீதிமன்றம் யாழ்ப்பாணத்திலும் அமைக்கப்பட்டன. கிரிமினல் வழக்குகளுக்கு ஜூரி முறையும் அமுலுக்கு வந்தது.

★ 1889-மொன்டானா ஐக்கிய அமெரிக்காவின் 41 ஆவது மாநிலமாக இணைந்தது.

★ 1895-எதிர் மின்கதிர்களைச் சோதனையிடும் போது வில்ஹெம் ரொண்ட்ஜென் எக்ஸ் கதிர்களைக் கண்டுபிடித்தார்.

★ 1917-ரஷ்யாவில் ஒக்டோபர் புரட்சியை அடுத்து லெனின் ட்ரொட்ஸ்கி, ஸ்டாலின் ஆகியோருக்கு முழு அதிகாரமும் வழங்கப்பட்டது.

★ 1923-மியூனிக் நகரில் ஹிட்லர் தலைமையில் நாசிகள் ஜேர்மனிய அரசைக் கவிழ்க்கும் முயற்சி தோல்வியில் முடிந்தது.

★ 1938-பாரிஸ் நகரில் ஜேர்மனிய தூதுவர் கொலை செய்யப்பட்டதை அடுத்து ஜேர்மனியிலும் ஆஸ்திரியாவிலும் யூதர்களுக்கு எதிராக வன்முறைகள் கிளம்பின.

★ 1939-மியூனிக் நகரில் ஹிட்லரைக் கொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது.

★ 1942-மேற்கு உக்ரேனின் தெர்னோப் நகரில் நாசி ஜேர்மனியினர் 2 ஆயிரத்து 400 யூதர்களை பெல்செக் நகரில் இருந்த வதை முகாமுக்கு அனுப்பினர்.

★ 1950-கொரியப் போர்: ஐக்கிய அமெரிக்க வான்படையினர் வட கொரியமிக் விமானங்கள் இரண்டை சுட்டு வீழ்த்தினர்.

★ 1965-பிரித்தானிய - இந்தியப் பெருங் கடல் மண்டலம் அமைக்கப்பட்டது.

★ 1977-கி.மு.1 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க மன்னன் இரண்டாம் பிலிப்பு என்பவனின் சமாதி மனோலிஸ் அண்ட்ரோனிக்ஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

★ 1987-வடக்கு அயர்லாந்தில் பிரித்தானிய இராணுவ நினைவு நிகழ்வொன்றில் ஐரியக் குடியரசு இராணுவத்தினரின் குண்டுவெடித்ததில் 12 பேர் உயிரிழந்தனர்.

★ 2006- வாகரையில் இடம்பெற்ற பல்குழல் எறிகணை வீச்சுத் தாக்குதலில் 40 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 125 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

### பிறப்புக்கள்

★ 1656-எட்மண்ட் ஹேலி, பிரித்தானிய வானியல் ஆராய்ச்சியாளர் (இ.1742)

★ 1900-ந.பிச்சமூர்த்தி, தமிழ் இலக்கிய முன்னோடிகளுள் ஒருவர் (இ.1976)

★ **1902-ஜி.ஜி.பொன்னம்பலம், இலங்கையின் தமிழ் அரசியல்வாதியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் (இ.1977)**

★ 1927-லால் கிருஷ்ண அத்வானி, இந்திய அரசியல்வாதி

★ 1984-நயன்தாரா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை

### இறப்பு

★ 1958-சி.கணேசையர், ஈழத்துத் தமிழறிஞர் (பி. 1878)

### கணபதி காங்கேசர் பொன்னம்பலம்

#### ஜி.ஜி.பொன்னம்பலம்

ஜி.ஜி.பொன்னம்பலம் கணபதி காங்கேசர் பொன்னம்பலம். இலங்கைத் தமிழர்களின் நலன்கருதி ஆரம்பிக்கப்பட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் நிறுவுநர் ஆவார். இலங்கையின் அரசியலில் 1940 களிலும் 1950 களிலும் மிகவும் அறியப்பட்டிருந்த இவர் ஒரு திறமையான குற்றவியல் வழக்குரைஞர்.

#### வரலாறு

இவர் யாழ்ப்பாணத்தில் வடமராட்சிப் பகுதியிலுள்ள அல்வாய் என்னும் ஊரில் 1901 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் திகதி பிறந்தார். இவர் மானிப்பாய்க்கு அண்மையிலுள்ள நவாலியைச் சேர்ந்தவர். பொன்னம்பலம் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியிலும் கொழும்பு சென். ஜோசப் கல்லூரியிலும் கல்வி பயின்றார். பின்னர் உயர்கல்விக்காக இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் சென்று இயற்கை அறிவியல் துறையிலும் சட்டத்துறையிலும் பட்டம் பெற்றார். பின்னர் இலங்கை திரும்பிய அவர் கொழும்பில் வழக்குரைஞராகத் தொழில் புரிந்தார். நல்ல வாதத்திறமை கொண்ட பொன்னம்பலம் சிறந்த குற்றவியல் வழக்குரைஞராகப் புகழ் பெற்றார். 1948 ஆம் ஆண்டில் அரசு வழக்கறிஞர் என்னும் தகுதியைப் பெற்றார்.

#### அரசியல் வாழ்க்கை

இவர் 1944 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 29 இல் இலங்கையில் தமிழர் நலன்களைப் பேணும் நோக்கில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்னும் அரசியல் கட்சியை ஆரம்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெசோ அறிக்கை மிக முக்கியமானது ஸ்ராலினிடம் கூறினார் நவநீதம்பிள்ளை

**ஐ.நா மன்றத்தின் மேற்பார்வையில் பொது வாக்கெடுப்பு நடத்துவது உள்ளிட்ட ஈழத் தமிழர் வாழ்வுரிமை தொடர்பான பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 6 ஆம் திகதி ஐ.நா மனிதவுரிமை ஆணையகத்தின் தலைவர் நவநீதம்பிள்ளையை நேரில் சந்தித்து தி.மு.க.பொருளார் ஸ்டாலின், டி.ஆர் .பாலு. எம்.பி ஆகியோர் சுமார் 35 நிமிடங்களுக்கு மேலாக உரையாற்றினார்கள்.**

இது தொடர்பாக, தி.மு.க. தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளவை வருமாறு ,

இலங்கை தமிழர்களின் வாழ்வுரிமைக்கான டெசோ மாநாட்டு தீர்மானங்கள் அடிப்படையில் தி.மு.க தலைவர் கருணாநிதி கையெழுத்திட்டு அனுப்பிய அறிக்கையை தி.மு.க பொருளாளர் மு.க.ஸ்டாலின் , டி.ஆர். பாலு. எம்.பி. ஆகியோர் நியூயோர்க்கில் உள்ள ஐ.நா மன்றத்தின் துணை பொதுச்செயலாளர் யான்லியானை சந்தித்து ஏற்கனவே அளித்திருந்தனர்.

இதேவேளை நவநீதம்பிள்ளையிடம் இலங்கை வாழ்வுரிமை தொடர்பாக கருணாநிதி கையெழுத்திட்டு அளித்திருந்த அறிக்கையினை அவரிடம் அளித்து இலங்கையில் ஈழத்தமிழர்களின் நிலை பற்றி விபரமாக எடுத்துக் கூறினார்.

இலங்கையில் நடைபெற்ற போரினால் விதவைகளாக்கப்பட்ட 90 ஆயிரம் விதவை பெண்களின் பரிதாப நிலை மீள் குடியேற்றப் பணிகள் மேற்கொள்ளப்படாதது ஆகும்.

கடந்த 3 1/2 ஆண்டுகளாக போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் தங்கள் சொந்த மண்ணிலேயே நிம்மதியற்று வாழும் நிலை மாறி நிம்மதியாக வாழ வழி வகுத்தல் , தமிழர்கள் பகுதிகளில் உள்ள இலங்கை இராணுவ வீரர்கள் உடனடியாக வெளியேற்றப்படுதல் , தமிழர் பகுதியில் சிங்களவர்களை குடியேற்றுவதை தடுத்து நிறுத்தல் , போரின் போது தங்கள் வீடுகளை விட்டு ஓடிவிட்டதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்ட ஒரு இலட்சத்து 25 ஆயிரம் தமிழர்கள் மீண்டும் தங்கள் பகுதிகளில் குடியமர்த்தப்பட வேண்டும் என்பது குறித்து விரிவாக விளக்கி கூறினர்.

இந்த விபரங்களை எல்லாம் கவனத்துடன் கேட்டறிந்து ஐ.நா. மனிதவுரிமை ஆணையத்தலைவர் நவநீதம்பிள்ளை நீங்கள் கூறிய தகவல்கள் அனைத்தும் மிக முக்கியமானவை, பயனுள்ளவை என்று மு.க.ஸ்டாலினிடம் கூறினார். மேலும் இந்த ஆதாரங்களும் ஆவணங்களும் பத்திரமாக பாதுகாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் போர்க்குற்றங்கள் மற்றும் நல்லிணக்க ஆணையக பரிந்துரைகள் குறித்து மனிதவுரிமை ஆணையகத்தில் அமெரிக்காவால் கொண்டுவரப்பட்டு இந்தியா ஆதரித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எந்தளவுக்கு செயற்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிய ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தின் சார்பில் தனது தலைமையிலான குழு ஒன்று அடுத்தாண்டு ஜனவரி மாதம் சென்று மேற்பார்வையிட இருப்பதாகவும் ஐ.நா. மனித உரிமை ஆணையகத் தலைவர் நவநீதம்பிள்ளை தெரிவித்தார்.

அத்தோடு கருணாநிதி கையெழுத்திட்டு அளித்துள்ள அறிக்கையில் இடம்பெற்றுள்ள அம்சங்கள் குறித்து ஐ.நா. பொதுச் செயலாளருடன் விவாதித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் ஐ.நா. மனிதஉரிமை ஆணையகத் தலைவர் நவநீதம்பிள்ளை தெரிவித்தார் என அதில் கூறப்பட்டுள்ளது. (அ-2)

# கைதடி பொதுநூலகத்தின் தே.வா.மாத போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகம் மாணவர்கள், வாசகர்கள் மத்தியில் பல போட்டிகளை நடத்தியிருந்தது.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்களை நூலகர் க.மகேஸ்வரன் அறிவித்துள்ளார். அதன் விபரம் வருமாறு,

**பொதுஅறிவு நுண்ணறிவுப் பரீட்சை**

க.பொ. த(சா/த)

க.லக்சுதன் (யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்), செ.ருபிந்தன் (யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்), எஸ். லவண்ராஜ் (யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்)

**க.பொ.த (உ/த)**

ச.விக்னேஸ்வரன் (யா/கைதடி முத்துக் குமாரசுவாமி மகா வித்தியாலயம்), ப.தர்சனியா (யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்), ஜெ.நித்தியா (யா/கைதடி முத்துக் குமாரசுவாமி மகா வித்தியாலயம்), செ.டீலக்சி (யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்)

**கிரகித்தல் பயிற்சி**

ஆரம்பப்பிரிவு

சு.சங்கீர்த்தனன் (யா/கைதடி கலைவாணி வித்தியாலயம்), த.கபிலசா (யா/கைதடி முத்துக் குமாரசுவாமி மகா வித்தியாலயம்), செ.ஜதுர்சன் (யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்), வ.அபிநதா (யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்), அ.தமிழ்த்தாஸ் ( யா/கைதடி கலைவாணி வித்தியாலயம்)

**கட்டுரைப்போட்டி**

தரம் 6,7

க.தனுசா (யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்), அ.லகுலன் (யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்), மோ. கயிலினி (யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்)

தரம் 8,9

அ.பிரியந்தினி (யா/கைதடி முத்துக் குமாரசுவாமி மகா வித்தியாலயம்), சி.வினித்தா (யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்), ம.சர்மினி (யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்)

தரம் 10, 11

ஆர். அஜந்தா (யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்), ப.பவித்திரா (யா/கைதடி குருசாமி வித்தியாலயம்), செ.ருபிந்தன் (யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்)

**கதை சொல்லல் போட்டி**

முன்பள்ளி மாணவர்கள்

ரி.மதுசன் (யா/கைதடி மேற்கு சரஸ்வதி முன்பள்ளி), ச.இசையாளன் (யா/கைதடி மேற்கு சரஸ்வதி முன்பள்ளி), சு.மகிழ்நிலா (யா/கைதடி விநாயகர் முன்பள்ளி), செ.பானுஜா (யா/கைதடி விநாயகர் முன்பள்ளி), கா.கார்த்திகன் (யா/கைதடி மேற்கு சரஸ்வதி முன்பள்ளி) (அ-9)

# வீடமைப்பு திட்டத்தில் எம்மையும் இணையுங்கள்

## பாதிக்கப்பட்ட மக்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் திரண்டனர்

நிரந்தர வீடமைத்து தருமாறு கோரி புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவு அலுவலகத்தில் மக்கள் கூட்டம் அணி திரண்டது.

இந்திய வீடமைப்பு திட்டம் கிடைக்க பெறாத கிராமங்களைச் சேர்ந்த மக்களே இவ்வாறு அணி திரண்டனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் பேருந்துகளில் வந்திறங்கிய மக்கள் தற்போது வீடுகளின்றி தாம் எதிர் கொள்ளும் பிரச்சினைகளையும் துன்பங்களையும் தெரிவித்ததுடன் வழங்கப்பட்டுவரும் வீடமைப்பு திட்டத்தின் கீழ் எமக் கும் சந்தர்ப்பம் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி கூறினர். புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் தாம் இவ்விடயம் தொடர்பாக உரிய தரப்பினர் கவனத்திற்கு கொண்டு செல்வ தாகவும் தாம் நேரில் வந்து பார்வையிடுவ தாகவும் கூறியதுடன் அனைவருக்கும் வீடு கள் கிடைப்பதற்கான வசதிகளை ஏற்படுத்து வதாகவும் வாக்குறுதிகளை வழங்கினார். (அ-3-260)

## வடமராட்சியில்

# நீதிமன்ற உத்தரவை மீறி இயங்கும் தனியார் கல்வி நிலையங்கள்

(கரவெட்டி)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவை மீறி பல தனியார் கல்வி நிலையங்களும் மற்றும் விசேட வகுப்புக்களும் இரவு வேளைகளில் இடம்பெற்று வருவதாக வடமராட்சி மாணவர்களது பெற்றோர் சுட்டிக் காட்டியுள்ளனர். பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் இவ்வருடம் நடுப்பகுதியில் தனியார் கல்வி நிலையங்கள் எவ்வாறு இயங்க வேண்டும் என 18 நடைமுறைகளை கல்வி நிலைய நிர்வாகிகளுக்கு கடிதம் மூலம் அறிவுறுத்தியது. இதற்கமைவாக அண்மைக்காலமாக அவ்விதிமுறைகளை பல தனியார் கல்வி நிலையங்கள் பின்பற்றுவதில்லை என்றும் மாணவர்களது பெற்றோர் சுட்டிக்காட்டியுள்ளனர். இதில் முக்கியமாக தனியார் கல்வி நிலையங்களில் உள்ள ஆசிரியர்கள் தமது வருமானம் கருதி இரவு வேளைகளில் விசேட வகுப்புக்களை தமது வீடுகளில் வைப்பதாக குற்றம் சாட்டும் பெற்றோர் பெண்பிள்ளைகளும் விசேட வகுப்புக்கள் என்ற பேரில் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் கல்வி கற்க வேண்டிய நிலையும் உள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர். இதேபோன்று பல குறைபாடுகள் தனியார் கல்வி நிலையங்களில் காணப்படுவதனால் மாணவச் சமூகம் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-3-24)







இலங்கைவங்கி சுன்னாகம் மேற்றரக்கிளையின் விரிவாக்கல் அலுவலகமாக இருந்து முழுமையான கிளையாகத் தரமுயர்த்தப்பட்ட உரும்பிராய் கிளையின் சம்பிரதாயபூர்வ நிகழ்வு கடந்த முதலாம் திகதி உரும்பிராய் கிளையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் உரும்பிராய் கிளை முகாமையாளர் ஈ.சந்தனு உரையாற்றுவதையும் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.என்.மாணிக்கசிங்கி சிறுவர் சேமிப்பு கணக்கைப்பேணும் சிறுமி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- புன்னாலைகட்டுவன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு


95

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

# போர்த்துக்கேயர் காலம்

### யாழ்ப்பாண அரசும் போர்த்துக்கேயரும்


முதலாம் சங்கிலி 1564 ஆம் ஆண்டு வரை அரசியற்றினான். சங்கிலி செகராசசேகரனுக்குப்பின்னர் புவிராசபண்டாரம், காசிநயினார் (1565), பெரியபிள்ளை செகராச சேகரன் (1570), புவிராச பண்டாரம் பரராசசேகரன் (1616) ஆகிய ஆறு மன்னர்கள் யாழ்ப்பாணத்தின் ஆட்சி யாளர்களாக விளங்கினர். யாழ்ப் பாண இராச்சியத்தில் நிகழ்ந்த உண் ணாட்டுக் குழப்பங்களாலும் போர்த் துக்கேயரின் அரசியல் தலையீட்டி னாலும் இந்த மன்னர்கள் நிலை யாகத் தொடர்ந்து ஆள முடிய வில்லை. புவிசாரபண்டாரன் இரண்டு தடவைகள் மன்னாரைத் தாக்கிப் போர்த்துக்கேயரைத் துரத்த முயன் றும் இயலாது போயிற்று.


போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டையின் நுழைவாயில்

கி.பி. 1591 இல் போர்த்துக்கேயர், மூன்றாவது தடவையாக அந்திரே பூர்த்தாடு டி மென்டொன்சா என்னும் படைத் தலைவனைப் பெரும்படையுடன் யாழ்ப்பாணத் துக்கு அனுப்பி வைத்தனர். அப் படை இரண்டாம் நாள் நல்லூரை நோக்கி நகர்ந்தபோது எதிர்கொண்ட தமிழர்படை, அப்படையெடுப்பில் தோல்வி கண்டது. போர்த்துக்கேயர் படை, நகரை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தபோது யாழ்ப்பாண அரசின் ஒரு இளவரசனாகிய பெரியபிள்ளை செகராசசேகரத்தின் மகன் போரில் ஈடுபட்டுக் கொண் டிருக்கும்போது சீமோபிஞ்சை என்ற போர்த்துக்கேய வீரனின் தாக்கு தலுக்கு சமாளிக்க முடியாது நிலத் தில் சரிந்து, வாளுக்கிரையாக இருந் தான். அவனை வாளுக்கிரையாக் காது சீமோபிஞ்சை காப்பாற்றி னான். அக்காட்சியைச் சித்தரிக்கும் மரச்சிற்பம் சப்பிரகமுவவில் மகா சமன் தோவாலயத்தில் இன்று முள்ளது. அதில் சீமோபிஞ்சை வாளை ஓங்கி நிற்க அவன் காலடியில் இளவரசன் சரிந்து கிடக்கிறான். அப்போரில் புவிராசபண்டாரன் கைது செய்யப்பட்டு சிரச்சேதம் செய் யப்பட்டான். போர்த் துக்கேயத் தளபதி பூர்த்தாடு, யாழ்ப் பாணப் பிரதானி களை அழைத்து ஒரு கூட்டம் நடத்தி, அதில் சீமோபிஞ்சை யால் காப்பாற்றப் பட்ட பெரியபிள்ளை யின் மகன், எதிர் மன்னசிங்கனை மன்ன னாக அரியணையில் அமர்த்தி மீண்டனர். இவனே யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதி மன்னனாவான். அவன் இறந்ததும் நாட்டில் கலவரம் ஏற்பட்டது. அதனால் மீண்டும் போர்த் துக்கேயர் படையெடுக்க நேர்ந்தது.

கி.பி. 1620 ஆம் ஆண்டு போர்த்துக் கேயரின் இறுதிப் படையெடுப்பு நிகழ்ந்தது. இப்படையெடுப்புக்கு பிலிப் டி ஒலிவேறா தலைமை தாங்கி னான். இப்படையெடுப்பில் தமிழ் வீரர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டனர். யாழ்ப் பாண இராச்சியம் முற்றாகக் கைப்பற் றப்பட்டது. யாழ்ப் பாண இராச்சியத்தின் தேசாதிபதியாக பிலிப் டி ஒலிவேறா தன்னை நியமித்துக் கொண் டான். அவன் காலத் தில் நல்லூர்க் கந்த சுவாமி கோயில் உட் படப் பல இந்துக் கோயில்கள் தரை மட்டமாக்கப்பட்டன. அக்கோயில்களைத் தரைமட்டமாக்கிப் பெறப்பட்ட கற்களை யும் பயன்படுத்தி யாழ்ப்பாணக்கோட்டை கட்டப்பட்டது. பல நூற்றாண்டு காலமாகச் சுதந்திரத்தை பேணிப் பாதுகாத்துவந்த யாழ்ப் பாண இராச்சியத்தில் கி.பி 1621 இல் சுதந்திர சூரியன் அஸ்தமித்தது.


போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டையிலுள்ள தூக்குமேடை


விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட பின் யாழ்ப்பாணக்கோட்டையின் பகுதி

### போர்த்துக்கேயர் ஆட்சி

இலங்கையில் 1505 ஆம் ஆண்டு காலடி பதித்த போர்த்துக் கேயர் 1658 வரை ஆட்சி செலுத்தினர். முதலில் கோட்டை இராச்சியத்தைத் தம தாக்கிக் கொண்டனர். பின்னர் சீதாவாக்கை இராச்சியத்தைத் தமது ஆள்புலத்தோடு இணைத்துக் கொண்டனர். அதன் பின்னர் யாழ்ப்பாண இராச்சியம் அவர்கள் வசமாகியது. கண்டி யைக் கைப்பற்ற எடுத்த முயற்சிகள் தோல்வி யைத் தழுவிக்கொண் டன. டொன் ஜுவான் தர்மபாலனின் மரணத் தின் பின்னர் நிகழ்ந்த மல்வானை ஒப்பந்தம் கோட்டை அரசினைப் போர்த்துக்கேயருக்கு உட மையாக்கியது. போர்த் துக்கல் அரசன் 1 ஆம் பிலிப் தர்மபாலன் 1580 ஆம் ஆண்டு எழுதிய, 1583 இல் திருத்திய நன்கொடை உறுதி மூலம் கோட்டைக்குரியவனாக மாறினான். அதனால் மலைநாடு தவிர்ந்த இலங் கையின் கரையோரப் பிரதேசங்கள் அனைத் திலும் போர்த்துக்கேயர் ஆட்சி அதிகாரம் நிலைத்தது. கோட்டை, சீதாவாக்கை, இறய்கமம், யாழ்ப்பாணம் ஆகிய இராச்சியங்களும், மாத்தறை, ஏழுகோறளை, நான்கு கோறளை, மட்டக்களப்பு, கொட்டியாறு, திருகோண மலை, புத்தளம் ஆகிய மாகாணங் களும் போர்த்துக்கேயரால் பரிபாலிக் கப்பட்டன. 1597 மே மாதம் 29 ஆந்திகதி சிங்களப்பிரதானிகள், அதிகாரிகள், முதலியார்கள், பட்டங் கட்டி முதலானோர் ஒரு வட்டமேசை முன் கூடி, போர்த்துக்கல் அரசனுக்கு அவனை ஏற்றுச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். 10 சிங்களப் பாரம்பரிய சட்டங்களை அனுசரித்தும் போர்த்துக்கேய சட்டங்களுக்கமையவும் இலங்கையை நிர்வகிப்பதாகப் போர்த் துக்கேய தளபதி டொன் அன்ரோ னியோ மல்வானை ஒப்பந்தத்தில் ஒப்புக் கொண்டான்.


எதிர்வீரசிங்க மன்னன் போர்த்துக்கேய வீரனான சீமோ பிஞ்சையால் காப்பாற்றப்பட்ட அக்காட்சியைச் சித்தரிக்கும் மரச்சிற்பம்

மேற்குக் கரையோரம் புத்தளத்தி லிருந்து வளவை கரையோரம், கொழும்பு தவிர்ந்த ஏனைய பகுதி கள், நான்கு திசாவனிகளாகப் பிரிக்கப்பட்டது. கொழும்பு அரச நகரமாகக் கருதப்பட்டது. ஏனைய நான்கு திசாவனிகளாக மாத்தறை, சப்பிரகமூவா, நான்கு கோறளை, ஏழு கோறளை என்பன அமைந்தன. அவை ஒவ்வொரு திசாவனிகளால் நிர்வகிக்கப்பட்டன. அவர்களுக்கு உதவியாக அதிகார், மோட்டலாக் கள், பசநாயகாக்கள் என்போர் அமைந்தனர். திசாவனிகள் திறை விதிக்கும் அதிகாரம் கொண்டிருந் தன. ஒவ்வொரு திசாவனிகளும் கோறளைகளாகப் பிரிக்கப்பட்டிருந் தன. இறை வசூலிக்கும் கோறளை விதானை பொறுப்பாக இருந்தான். அவர்களுக்கு உதவியாக அத்துக் கோறளைமார் இருந்தனர்.

பௌத்தமதம் பெரும்பான்மைச் சிங்கள மக்களால் கைக்கொள்ளப் பட்டிருந்தது. இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் யாழ்ப்பாண அரசிலும் கண்டி அரசிலும் வாழ்ந்தனர். இஸ்லாமியர்கள் கரையோரங்களில் காணப்பட்டனர். போர்த்துக்கேயரின் றோமன் கத்தோலிக்க சமயத்தை இலங்கை மக்கள் பலர் தழுவிக் கொண்டனர். கல்விக்காகவும் பதவிகளுக்காகவும் பலர் கத்தோ லிக்க சமயத்தைத் தழுவிக்கொண் டனர். இலங்கையின் சமூக வாழ்வில் போர்த்துக்கேயச் செல்வாக்கைக் காணலாம். 1658 வரை போர்த்துக் கேயரின் ஆட்சி இலங்கையில் நிலவியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களை வறுமையிலிருந்து மீட்கவே திவிநெகும சட்டமூலம்

## அமைச்சர் பசில் விளக்கம்

(கொழும்பு)

**வறுமையை உரிமையாக கொண்டிருக்கும் மக்களை வறுமையிலிருந்து மீட்டு அபிவிருத்தியின் பங்காளிகளாக இணைத்துக்கொள்ளும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சட்டமூலமே திவிநெகும சட்டமூலம் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

இலவச கல்வித்திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக சீ.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா கொண்டு வந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சட்டமூலங்கள் போன்று இந்த சபையில் பல சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சட்ட மூலங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இவை போன்ற மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சட்டமூலமாக திவிநெகும சட்ட மூலம் உள்ளது. இன்று சமர்ப்பிக்கப்படுகின்ற சட்டமூலம் இரண்டு தடவைகள் உச்ச நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அத்துடன் திவிநெகும சட்டமூலம் நாட்டு மக்கள் மத்தியில் போதியளவு விவாதத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக மாகாண சபைகளில் விவாதத்துக்கு உட்படுத்தப்பட்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறிப்பாக கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் காங்கிரஸ் சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தது. முஸ்லிம் காங்கிரஸ் வழங்கிய ஒத்துழைப்பை மறந்துவிட முடியாது.

திவிநெகும சட்டமூலம் எந்த நிறுவனத்தின் அதிகாரத்தையும் ஒருபோதும் பாதிக்காது. வறிய மக்களுக்கு உதவுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டது.


எனவே, இந்த நாட்டு மக்களிடம் குறிப்பாக வடக்கு மக்களிடமும் சகல அரசியல் கட்சிகளிடமும் இச் சட்டமூலத்திற்கு ஆதரவை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்றார். (அ-2)

# மழலைகளின் கலை விருந்து

திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும் இணைந்து நடத்தும் மழலைகளின் மாபெரும் கலை விருந்து நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 2 மணிக்கு நல்லூர் நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் சிறுவர் பூங்கா முன்பள்ளி காப்பகத்தின் பணிப்பாளர் பா.தனபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக நடராசா- பரமேஸ்வரி மணி மண்டப ஸ்தாபகர் நடராசா-சத்தியரூபன்,திருமதி விஜயகுமாரி சத்தியரூபன், சிறப்பு விருந்தினர்களாக சைவத் தமிழ் பண்பாட்டுக்கழக பணிப்பாளர், ஆசிரியர் வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன, திருமதி அனுசூயா அருளானந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அத்துடன் மழலைகளின் வரவேற்பு நடனம், தீப நடனம், கோலாட்டம்,கும்மி அபிநயப்பாடல், ஆடல், பாடல், நாட்டிய நாடகம், பரதநாட்டியம், காவடி, கிறிஸ்தவ அபிநயப் பாடல், அம்மன் ஆடல், பிட்டுக்கு மண் சுமந்த பெருமானார் நாடகம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. அத்துடன் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (அ-2)



வாழ்வு எழுச்சித்திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச செயலர் பிரிவில் **தேசத்தைக் கட்டியெழுப்புவோம், மரங்களை வளர்ப்போம் என்ற தொனிப்பொருளுக்கமைய** தென்னங்கன்றுகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் வேலணை பிரதேச செயலாளர் திருமதி மஞ்சுளா சதீசன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகளை வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சி.சிவராசா வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(படம்:- வேலணைச் செய்தியாளர்)

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த 13 ஆவது சட்டமூலமே தடை

(கொழும்பு)

போருக்கு பின்னர் இனங்களுக்கு இடையில் நட்புறவையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம் தடையாக இருப்பதாக பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

இனங்களுக்கு இடையிலான இடைவெளியை இல்லாமல் செய்து ஐக்கியத்தை கட்டியெழுப்பி மறுசீரமைப்பை ஏற்படுத்துவதில் மாகாண சபைகள் மூலம் எந்த பயனும் கிடைக்காது எனவும் அவர் கூறியுள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் மூலம் இனங்கள் தனித்தனியாக பிரிந்து செல்வது கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நன்கு உணர்த்தியது. இதனால் மாகாண சபை முறைமையை இரத்துச் செய்து விட்டு இனங்களுக்கு இடையில் தொடர்புகளை கட்டியெழுப்பி இலங்கையர் என்ற அடையாளத்தை ஏற்படுத்தும் அரசியல் அமைப்புத் திருத்தம் ஒன்றை மேற்கொள்வது குறித்து கவனம் செலுத்த வேண்டும் எனவும் முஸ்தபா கூறியுள்ளார்.

இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டை பாதுகாப்பதில் 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச்சட்டம் தடையாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இளைஞர் மீது வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

மோட்டர் சைக்கிளில் வந்தவர்கள் இளைஞரை வாளால் வெட்டியதில் இளைஞர் படுகாயமடைந்துள்ள நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாள்வெட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் உரும்பிராய் ஒஸ்கார் லேனில் இடம்பெற்றுள்ளது. இதில் புத்தளம் தில்லையடியை சேர்ந்த தங்கராசா சந்திரகுமார் (வயது 19) என்பவரே வாள் வெட்டுக்கிலக்காகியுள்ளார்.

கட்டட வேலையின் நிமித்தம் உரும்பிராயில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்துள்ளார். சம்பவ தினமன்று குறித்த இளைஞர் வீட்டிற்கு வெளியிலிருந்து கைத்தொலைபேசி கதைத்துக் கொண்டிருந்துள்ளார்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் குறித்த இளைஞரை வாளினால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இதில் படுகாயமடைந்த இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் தாம் பொலிஸாரிடம் முறையிடப்படவுள்ளதாக தெரிய வருகின்றது. (அ-4)

# ஆதிவாசிகளுக்கு 30 வீடுகளை உள்ளடக்கி வீடமைப்பு திட்டம்

தேசத்திற்கு மகுடம் வேலைத்திட்டத்தின் கீழ் ஆதிவாசிகளுக்காக 30 வீடுகளை உள்ளடக்கி வீடமைப்புத் திட்டம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளதாக அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இவ்வீடமைப்புத் திட்டமானது மஹஓய பகுதியில் பொல்லபெத்த ஆதிவாசிகள் கிராமம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இந்த வீடமைப்புத்திட்ட நிர்மாண வேலைகளுக்காக 15 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார். தொலைத் தொடர்பு தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை இந்த வீடமைப்புத் திட்டத்துக்கான அடிக்கல்லை நாட்டி வைப்பார். (அ-2)

# மருந்து ஒவ்வாமையால் 27 பேர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

மருந்து ஒவ்வாமை காரணமாக குருநாகல் மாஸ்பொத்த மகா வித்தியாலய மாணவர்கள் 27 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குருநாகல் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் வழங்கப்பட்ட விற்றமின் ஏ மருந்து ஒவ்வாமை காரணமாகவே மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். குறித்த பாடசாலையின் 3, 4 ஆம் தரத்தில் பயிலும் மாணவர்களுக்கு இந்த விற்றமின் வழங்கப்பட்டுள்ளது.

விற்றமின் அருந்தியவுடன் மாணவர்களுக்கு வாந்தி, வயிற்றுவலி, மயக்கம், களைப்பு என்பன ஏற்பட்டதால் வைத்தியசாலையில் அனுமதிக்ககப்பட்டனர். இதனால் விற்றமின் வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவர்களில் இருவர் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ-2)

# 400 ரூபா கொடுக்கல் வாங்கலால் பிரச்சினை; ஒருவருக்கு கத்திக்குத்து

## ஒருவரது வீடும் தீக்கிரையானது

கல்முனையில் 400 ரூபா கொடுக்கல் வாங்கல் தகராறு காரணமாக ஒருவர் கத்திக் குத்துக்கு இலக்கான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அதே வேளை ஒருவரது வீடும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

கல்முனை- சாய்ந்தமருது, சாயிரா கல்லூரி வீதியில் உள்ள அயலவர்கள் இருவர் 400 ரூபா கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டுள்ளனர். இக்கொடுக்கல் வாங்கல் காரணமாக அவர்களுக்கிடையில் தகராறு ஏற்படவே இருவரும் கத்தியால் குத்தி சண்டையிட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கத்தியால் மற்றவரை குத்திய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தகராறில் ஈடுபட்டு அயலவரை கத்தியால் குத்தியவருடைய வீடு, காரிற்கு இனந்தெரியாத நபர்கள் தீயிட்டுள்ளனர். இதன்போது அவரது வீடு முற்றுமுழுதாகத் தீக்கிரையாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலில் உலோக குண்டுச் சிதறல்கள்; விசேட வைத்திய வசதி தேவை

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் ஆனந்தன் எம்.பி. கோரிக்கை

(கொழும்பு)

**இலங்கையின் வடக்கே வன்னிப்பிரதேசத்தில் யுத்த மோதல்களின் போது படுகாயமடைந்து உடலில் உலோகத்துண்டுகளான குண்டுச்சிதறல்களுடன் வாழ்கின்ற மாணவர்களுக்கு விசேட வைத்திய வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.**

குறிப்பாக மாணவர்களுடைய உடலில் இருந்து உலோகத்துண்டுகள் அகற்றுவதற்கு கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என முல்லைத்தீவு மாவட்டத்தின் அடிப்படைத் தேவைகள், பிரச்சினைககள் குறித்து ஆராய்வதற்காக கூடிய மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் இந்த கோரிக்கையை தான் முன் வைத்திருப்பதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கூறினார்.

இறுதி யுத்தம் அகோரமாக நடைபெற்ற காலத்தில் முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பகுதியில் ஷெல் வீச்சு சம்பவம் ஒன்றில் படுகாயமடைந்து தலை, வயிறு, கால் என்பவற்றில் குண்டுச் சிதறல்களுடன் வாழ்ந்து வருகின்ற யுவதி ஒருவர் இரும்புத் துண்டுகள் வலியை ஏற்படுத்தி துன்பத்தை கொடுப்பதனால் வயிறாற சாப்பிட முடியாதிருப்பதாக, தெரிவிக்கின்றார்.

தலையில் உள்ள குண்டுச் சிதறலால் வெயில் மற்றும் குளிர் காலங்களில் வலியை கொடுப்பதாக கூறுகின்றனர். சிறிது நேரம் மாத்திரமே படிக்க முடியும். தொடர்ச்சியாக இருந்து படிக்கவோ வாசிக்கவோ முடியாது. ஆசிரியர் கூறுவதை கூர்ந்து கவனிக்க முடியாத நிலை இருப்பதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவற்றுக்கெல்லாம் காரணமான ஷெல் துண்டுகளை அப்புறப்படுத்துவதென்பது செலவுமிக்க வைத்திய சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும் என்று வைத்தியர்கள் கூறுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில வேளைகளில் இந்த உலோகத்துண்டுகளை அகற்றுவது உயிருக்கே ஆபத்தை விளைவிக்கலாம் என்று வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் என்ன செய்வதென்று தெரியாத நிலையில் அவல வாழ்க்கை வாழ்ந்து வருவதாக அவர் கூறுகின்றார்.

இவரைப் போன்றவர்களின் துயர் துடைப்பதற்காக விசேட வைத்திய நிபுணர்களை கொண்ட குழுவின் மூலம் இவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கூறினார். (அ-2-266)

## இலங்கையில் எச்.ஐ.வி தொற்று அதிகரிப்பு

நாட்டின் இளைய தலைமுறையினரிடம் எச்.ஐ.வி தொற்றானது கடந்த வருடத்திலும் பார்க்க நூற்றுக்கு 5 சதவீதம் அதிகரித்துள்ளதாக தேசிய தொற்று நோய் தடுப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் எச்.ஐ.வி தொற்றாளர்களாக 129 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். எனினும் இந்த வருடத்தில் முதல் 10 மாத காலப்பகுதியில் மாத்திரம் 140 பேர் இனங்காணப்பட்டுள்ளதாக தொற்று நோய் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் நிமல் எதிரிசிங்க தெரிவித்தார். (அ-2)

## உளநல நாள் நிகழ்வுகள்

உலக உளநல நாள் நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை யாழ்ப்பாணம் கலைத்தூதுமண்டபத்தில்நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைத்துறை பீடாதிபதி பேராசிரியர் வி.பி. சிவநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (அ-9)

## கெய்ன் இந்திய எண்ணெய் நிறுவனத்துக்கு இவ்வாண்டுக்கான தங்கமயில் விருது

இலங்கையில் எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டுள்ள கெயின் லங்கா நிறுவனத்தின் தாய் நிறுவனமாக கெயின் இந்தியா நிறுவனத்துக்கு தங்கமயில் விருது கிடைத்துள்ளது.

இவ் ஆண்டுக்கான கூட்டக நிறுவன ஆளுகைக்கான தங்கமயில் விருதே கிடைத்துள்ளது. பிரித்தானியாவின் சமூக மற்றும் உள்ளூராட்சி மன்றத்துக்கான வெளிவிவகார செயலாளர் எரிக் பிக்கல்சிடமிருந்து கெய்ன் நிறுவனம் சார்பாக அதன் அனர்த்த பாதுகாப்பு பணிப்பாளரும் கூட்டுநிறுவன செயலாளருமான நிர்ஜா சர்மா விருதினை பெற்றுக் கொண்டார்.

இந்த விருதை வென்றெடுத்தமை தொடர்பில் கருத்து தெரிவித்த கெய்ன் இந்தியாவின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் பி.இளங்கோ, எமது வர்த்தக நடவடிக்கைகள் உயர்ரக தரங்களைகொண்டும் சிறப்பான ஒழுக்க நெறி முறைகளையும் சிறந்த செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

இதன்மூலம் கூட்டக நிறுவன ஆளுகையின் கீழ் உத்தரவாதம், பொறுப்பு ஆகியவற்றை மேம்படுத்தி எமது பங்காளர்களையும் பாதுகாக்க நாம் கடமைப்பட்டுள்ளோம் என கூறினார்.

கடந்த 17 ஆண்டுகளாக கெய்ன் இந்தியா ஹைதரோகாபன் ஆய்வு கண்டுபிடிப்பு ஆகியவற்றை மேற்கொண்டுள்ளதுடன் தமது நடவடிக்கைகள் மூலம் நாளாந்தம் 2 இலட்சம் பீப்பாய் மசகு எண்ணெய் உற்பத்தி செய்கின்றது. இது இந்தியாவின் நாளாந்த உற்பத்தியின் 20 வீதமாக அமைந்துள்ளது.

சுவீடனின் முன்னாள் பிரதமரும் வன வள மற்றும் சூழல் பாதுகாப்பு அபிவிருத்திக்கான உலக ஆணைக்குழுவின் இணை தலைவருமான ஒலா உல்ஸ்டனும் பணிப்பாளர்களுக்கான இந்திய நிறுவனத்தின் தலைவரான லெப்டினன்ட் ஜெனரல் ஜே.எஸ்.அளுவாலியா ஆகியோரும் விருது வழங்கும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். (அ-2)

## ஷிராணிக்கு எதிரான குற்றப் பிரேரணையை விசாரிக்க குழு அமைப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ள அரசியல் குற்றப்பிரேரணையை விசாரிப்பதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியின் சார்பாக ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்க்கட்சியின் சார்பில் நான்கு உறுப்பினர்களும் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இதன்படி ஐக்கிய தேசிய கட்சி சார்பாக இரண்டு பேரும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மற்றும் ஜனநாயக தேசிய கூட்டமைப்பு சார்பாக தலா ஒருவரும் நியமிக்கப்படவுள்ளனர். (அ-2)

## பிரட்ரிக்கா ஜேன்ஸிற்கு எதிராக பிடிவிறாந்து

(கொழும்பு)

சண்டேலீடர் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் பிரட்ரிக்கா ஜேன்ஸிற்கு எதிராக நீதிமன்றம் பிடிவிறாந்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலவிற்கு எதிராக அவதூறு செய்திகளை பிரசுரித்ததாக பிரட்ரிக்கா மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த அவதூறு குற்றச்சாட்டு வழக்கு நேற்று முன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணைகளுக்காக பிரட்ரிக்கா ஜேன்ஸ் சமுகமளிக்கவில்லை. நீதிமன்றில் ஆஜராகாத காரணத்தினால் பிரட்ரிக்கா ஜேன்ஸிற்கு மேன்முறையீட்டு நீதவான் ஸ்ரீஸ்கந்தராஜா பிடிவிறாந்து உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த மேன்முறையீடு தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதேவேளை பிரட்ரிக்கா ஜேன்ஸ் மேற்குலக நாடொன்றில் அரசியல் புகலிடம் பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



வடமாகாண கல்வி திணைக்களத்தின் அனுசரணையுடன் தீவகக்கல்வி வலயம் நடத்திய *முழுநிலா*கலைநிகழ்வுகள் அண்மையில் யா/ வேலணை மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண கல்விப்பணிப்பாளர் வ.செல்வராஜா மங்கள விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் உரையாற்றுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க. தடம் புரள்கிறது!

# தந்தையும் மகனும் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் வழி!

இலங்கைத் தமிழர்பிரச்சினையில் திராவிட முன்னேற்றக்கழகத்தில் அதிரடி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இலங்கைத் தமிழர்களுக்கு தனி ஈழமே தீர்வு என்று பேசிவந்த தி.மு.க. இப்போது இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையேயான ஒப்பந்தத்தை வலியுறுத்திப் பேசிவருகிறது. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே 1987 இல் போடப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கான அதிகாரப்பகிர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொண்டுவரப்பட்ட இலங்கையின் 13வது அரசியல் சட்டத் திருத்தம் பற்றி குரல் எழுப்புகிறது. கடந்த ஒகஸ்ட் 12 ஆம் திகதி தி.மு.க. டெசோ மாநாட்டை சென்னையில் நடத்தியது. அக்கூட்டத்திற்கு முன்பு நடைபெறுவதாக இருந்த கருத்தரங்கு விவாதத்திற்கான நிகழ்ச்சிநிரலில் அந்த 13வது அரசியல் திருத்தம் பற்றி குறிப்பிடப்படவில்லை. பிறகு டெசோ மாநாட்டில் 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அந்தத் தீர்மான்ங்களில் ஒன்றுகூட இலங்கை அரசின் 13வது சட்டத்திருத்தம் பற்றி சுட்டிக்காட்டவில்லை. ஏனென்றால் அந்த அதிகாரப் பகிர்வை தி.மு.க. மனதார ஒப்புக்கொள்ளாத மனநிலையிலேயே கடந்த காலங்களாக இருந்துவருகிறது. அதனால்தான் அடிக்கடி தமிழீழம் பற்றி பேசும் தி.மு.க. தலைவர் கருணாநிதி திடீரென்று ஒருமுறை கொசோவா, தெற்கு சூடான், தைமோர் போல் தமிழர்களுக்கும் தனி ஈழம் வேண்டும் என்றெல்லாம் கோரிக்கை வைத்து அதை இந்திய அரசே அது தி.மு.க. வின் கருத்து என்று கூறி கைகழுவி விட்டது. இவ்வளவு கடுமையாக இருந்த தி.மு.க. இப்போது திடீரென்று 13வது அரசியல் சட்டத்திருத்தத்தின் மீது அக்கறை காட்டுகிறது.



ஐ.நா.மன்றத்தின் துணைப் பொதுச் செயலாளரிடம் தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்ராலினும் அக்கட்சியின் நாடாளுமன்றத் தலைவர் டி.ஆர் பாலுவும் டெசோ தீர்மானங்களைக் கொடுக்கும் போது தி.மு.க.விடம் இந்த மாற்றம் வந்திருக்கிறது. அங்கே கொடுக்கப்பட்ட தீர்மானத்தில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் இலங்கையின் முன்னைநாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன ஆகியோரால் கையொப்பமிடப்பட்ட 1987 ஆம் ஆண்டு இந்திய -இலங்கை ஒப்பந்தத்தின்படி கொண்டுவரப்பட்டுள்ள இலங்கையின் 13வது அரசியல் சட்டத்திருத்தம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை ஒன்றுபடுத்தி அந்த மாகாணங்களுக்கு நிலம் சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் மற்றும் காவற்றுறை அதிகாரங்கள் வழங்கப்படுவதையும் கூறுகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படி ஒரு தீர்மானம் வாசகங்கள் ஏதும் டெசோ மாநாட்டில் போடப்பட்ட தீர்மானங்களில் இல்லை. ஆனால், இப்படி ஒரு கருத்தை முன்வைத்து டெசோ மாநாட்டில் பேசியது அம்மாநாட்டில் வரவேற்புரையாற்றிய மு.க.ஸ்ராலின் மட்டும்தான். அவர் தன்னுடைய பேச்சில் "1987இல் இந்தியாவின் இளைய தலைவர் பிரதமர் ராஜீவ்காந்தி இலங்கை ஜனாதிபதி ஜயவர்த்தனவுடன் மிகுந்த எதிர்பார்ப்போடு ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கினார். 25 ஆண்டுகள் உருண்டோடி விட்டதற்குப்பிறகும் அந்த ஒப்பந்தம் இன்றுவரை நடைமுறைக்கு வந்தபாடில்லை" என்று குறைபட்டுக் கொண்டார். ஆகவே ஐ.நா. மன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ள இப்போதைய தீர்மானங்களில் டெசோ மாநாட்டில் மு.க. ஸ்ராலின் பேசியதை வலியுறுத்தும் வகையில் இலங்கை அரசின் 13வது அரசியல் சட்ட திருத்தம் பற்றி சுட்டிக் காட்டயிருப்பது ஓர் அதிரடி மாற்றம்.

அதுமட்டுமன்றி ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து நடைபெற்ற ஆய்வு பற்றி கூறியுள்ள தி.மு.க. தலைவர் கருணாநிதியும் "இந்திய-இலங்கை ஒப்பந்தம் மூலமாக இலங்கை அரசியல் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 13வது அரசியல் திருத்தத்தை நடைமுறைப்படுத்தி தமிழருக்கு அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும், அடுத்த ஆண்டிலாவது வடக்கு மாகாணத்தில் தேர்தலை நடத்தவேண்டும்" என்ற இந்தியாவின் கருத்தை நினைவு கூர்ந்து தி.மு.க. தொண்டர்களுக்கு எழுதியுள்ள உடன்பிறப்புக் கடிதத்தில் கூறியிருக்கிறார். தமிழர்களுக்கு ஈழமே ஒரு வழியென்ற நிலைப்பாட்டில் இருந்த திராவிட முன்னேற்றக்கழகம் டெசோ மாநாட்டிற்குப் பிறகும் சமீபத்தில் ஐ.நா.சபை துணைப் பொதுச் செயலாளரை சந்தித்த பிறகும் இலங்கையின் தமிழர்களுக்கு அதிகாரம் வழங்க கொண்டுவரப்பட்ட 13வது சட்டத்திருத்தத்தின் மீது அதிக அக்கறை காட்டுகிறது. இதற்கு அச்சாரம் போட்டவர் அக்கட்சியின் பொருளாளர் மு.க.ஸ்ராலின் ஏனென்றால், அவர்தான் டெசோ மாநாட்டிலேயே ராஜீவ்-ஜயவர்த்தன ஒப்பந்தத்தை சுட்டிக்காட்டி பேசினார். அதுமட்டுமல்ல அந்த மாநாட்டிலேயே "இலங்கையின் ஒரேகொடி, ஒரே அரசியல் சட்டம் என்று சொன்னால்கூட பரவாயில்லை நம்மால் புரிந்துகொள்ளவும் பொறுத்துக்கொள்ளவும் முடியும்" என்று ஆணித்தரமாக கூறி ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர்களுக்குத் தீர்வுகாண தி.மு.கழகம் ஆதரவாக இருக்கின்றது என்ற கருத்தை அம்பலப் படுத்தியவர்.

ஒரு காலத்தில் இந்தியாவிற்குள்ளேயே திராவிட நாடு கேட்ட திராவிட முன்னேற்றக்கழகம், பிறகு அதையே மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் என்ற ரீதியில் மாநில சுயாட்சியென்ற ஜனநாயக பாதைக்கு ஏற்றவாறு தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டது. அதேபோல் இப்போது இலங்கைத் தமிழர் பிரச்சினையிலும் தனி ஈழம் என்பதை மாற்றி ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர்களுக்குத் தீர்வு என்ற பாதையை தேர்வு செய்திருக்கிறது. ஐ.நா.வுக்கு கொடுத்துள்ள தீர்மானங்களில் இலங்கை மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் மத்தியில் பொது வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருந்தாலும் தி.மு.க. முதல் முறையாக 13வது அரசியல் சட்டம் பற்றி வலியுறுத்தி நினைவு படுத்திக்கூறியிருப்பது இப் பிரச்சினையில் அக்கட்சியில் ஏற்பட்டுள்ள திருப்புமுனை என்றே சொல்ல வேண்டும்.

இதற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை. விடுதலைப்புலிகளை ஆதரித்தது தி.மு.க. என்று காரணம் காட்டி 1990களில் அக்கட்சியின் ஆட்சி தமிழகத்தில் மத்திய அரசால் (டிஸ்மிஸ் செய்யப்பட்டது) நீக்கப்பட்டது. பிறகு ஜெயின் கமிஷன் விசாரணையில் தி.மு.க. மீது குற்றஞ்சாட்டி அக்கட்சியின் மத்திய அமைச்சர் (இந்திய அரசு) பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை 1997 இல் ஐ.கே.குஜ்ரால் இந்திய பிரதமராக இருந்தபோது வலியுறுத்தப்பட்டது. "தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய அரசிற்கு நாங்கள் ஆதரவளிக்க முடியாது" (அப்போது காங்கிரசின் தயவில்தான் குஜ்ரால் பிரதமாராக இருந்தார்) காங்கிரஸ் கட்சி போர்க் கொடி உயர்த்தி, அதை குஜ்ரால் ஏற்றுக் கொள்ள மறுத்ததால், அவருக்கு அளித்து வந்த ஆதரவை காங்கிரஸ் விலக்கிக் கொண்டது. இதனால், இந்திய அரசே கவிழ்ந்து 1998 இல் இந்திய நாடாளுமன்றத்திற்கு பொதுத்தேர்தல் வந்தது. இந்தப் பழியைப் போக்கிக்கொள்ளவே முதலில் காங்கிரஸ் கட்சியுடன் 200 இந்திய நாடாளுமன்றத் தேர்தலின் போது கூட்டணி வைத்து தி.மு.க. அதுவும் சோனியாகாந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சியுடன் தி.மு.க. வைத்த அந்தக் கூட்டணி உதவியிருக்கிறது. என்றே சொல்ல வேண்டும். உலக அளவில் பயங்கரவாதத்திற்கும் தனிநாடு கோரிக்கைகளுக்கும் எழுந்துள்ள எதிர்ப்புணர்வு தி.மு.க.வையும் பாதித்துள்ளது. அதனால்தான் மெல்ல மெல்ல தன்னுடய பழைய நிலைப்பாட்டிலிருந்து விலகி, இப்போது இலங்கையின் 13வது அரசியல் சட்டத்திருத்தம் பற்றியே பேசுகிறது. அதுவும் குறிப்பாக 13வது அரசியல் சட்டத் திருத்தத்தை நீக்கவேண்டுமென்று இலங்கை பெரும்பான்மையினர் மத்தியில் கோரிக்கை எழுந்துள்ள நிலையில், இந்த சட்டத்திருத்தம் பற்றி பேச்சை தமிழகத்திலும், இந்தியாவிலும், ஐ.நா. மன்றத்திலும் தி.மு.க. எழுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது. இன்னும் சொல்லப்போனால் 1956களில் அக்கட்சி கோரிய ஈழத் தமிழர்களுக்கு சமவுரிமை, அமைதியான வாழ்க்கை என்ற நிலைப்பாட்டை நோக்கிச் சென்றுள்ளது.

கட்சியின் நிலைப்பாடு இப்படியிருக்கிறதென்றால், தி.மு.க.வின் அடுத்த தலைவராக போற்றப்படும் மு.க.ஸ்ராலினைப் பொறுத்த மட்டில், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஒரு ப்ராக்டிக்கலான (செயல் வடிவான) நிலைப்பாட்டை எடுக்கவே முன்வந்துள்ளார். தமிழகத்தில் அவருக்குப் போட்டியாக இருக்கும் தலைவர் வரிசையில் உள்ள வைக்கோவிலிருந்தும், ஏன் கட்சிக்குள் தனக்குப் போட்டியாக வளர்ந்து வரும் கனிமொழி எம்.பி.யிடமிருந்தும் இந்த விடயத்தில் மாறுபடுகிறார். அதனாலேயே ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர்களுக்கு தீர்வு என்ற கொள்கை நிலைப்பாட்டை அவர் துணிவுடன் எடுத்தார். ஏனென்றால் ஸ்ராலினின் பார்வையில் இலங்கைத் தமிழர்களுக்கு நல்லது நடக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் தி.மு.க.வில் இருக்கிறார்கள். தீவிரக் கருத்துக்களுடன் தனி ஈழம் வேண்டும் என்ற நினைத்தவர்கள் 1993 இல் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் வைகோ தலைமையில் பிறந்தவுடனேயே அங்கே போய்விட்டார்கள் என்றே எண்ணுகிறார் ஆகவே கனிமொழி, வைகோ போன்றவர்களுடனும், இதே தனி ஈழக்கோரிக்கையை வலியுறுத்தும் ராமதாஸ், சீமான் போன்றவர்களிடமிருந்து தான் விலகியும் வித்தியாசமாகவும் தமிழக அரசியலில் நிற்பதாகவே தன்னை முன்னிறுத்துகிறார் ஸ்ராலின். அதை தி.மு.க. தலைவர் கருணாநிதியும் வழிமொழிகிறார் என்பது ஐ.நா.பயணத்திற்குப் பிறகு இலங்கையின் 13வது அரசியல் சட்டத்திருத்தம் மீது அவர் காட்டும் அக்கறை. குறிப்பாக தொடர்ந்து 17 வருடங்களாக இந்திய அரசில் பங்கேற்றுவரும் தி.மு.க. வின் இந்த நிலைப்பாடு இலங்கை தமிழர் பிரச்சினையின் தமிழக கோணத்தை மாற்றி அமைக்கும் என்றே எதிர்பாாக்கலாம்.

- காசிநாதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளின் வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு

உலக வாழ்வில் பெற்றோர் பெறும் தலைசிறந்த பேறு அறிவுடைய மக்கள் பேறு ஆகும். ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய் என்கிறார் வள்ளுவர். குழந்தைகளைச் சிறந்த பண்புள்ளவர்களாகவும் நல்ல அறிவுள்ளவர்களாகவும் கல்வியாற்றல் மிக்கவர்களாகவும் வளர்த்தெடுப்பதில் பெற்றோரின் பங்கு இன்றியமையாததாக காணப்படுகின்றது.

ஒரு குழந்தையின் ஆரம்பகால வளர்ச்சி என்பது அதன் பெற்றோரிலேயே தங்கியுள்ளது. சிறுவர்களின் சிறந்த வளர்ச்சி தான் ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முன்னோடியாகின்றது. எனவே, சிறுவர்களை ஆரம்பத்திலிருந்தே சிறப்பான வகையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டியது பெற்றோரின் முக்கிய கடமையாகின்றது.

குழந்தையின் உணர்வுகள் வளர்வதற்குப் பெற்றோர் மற்றும் குடும்பத்தினரின் அன்பு அவசியமாகின்றது. குழந்தையின் உணர்வு வெளிப்பாட்டிற்கு உடனடி எதிர்வினை கிடைக்கவில்லையென்றால் அதன் சமூக வளர்ச்சி தாமதமாகின்றது. அன்பில்லாமல் தன்னந்தனியாக வளரும் குழந்தைகள் திக்கித் திக்கி அல்லது குளறுதலாக பேசுகின்றனர்.

மேலும் இக் குழந்தைகள் எதிலும் ஈடுபாடு இன்றி இருப்பார்கள். பேசுதல், விளையாடுதல் என்று ஆர்வங்களை வெளிப்படுத்தாமல் எப்போதும் அமைதியாக இருக்கும். இயக்க வளர்ச்சிகளான உட்காருதல், நிற்றல், நடத்தல் போன்றவையும் தாமதமாகிறது. பெற்றோரினால் அக்கறையாக சொல்லிக் கொடுக்கப்படாமல் வளரும் குழந்தைகள் நுண்ணறிவைப் பெற்றிருந்தாலும் கற்றுக் கொள்வது தாமதமாகின்றது.

நினைவாற்றல் வளருவதற்குக் கற்றுக் கொள்ளுதல் விடயங்களை உருக்காட்சிகளாகவோ (Images), ஒலி வடிவங்களாகவோ மீண்டும் மீண்டும் ஒத்திகை பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் கற்றவைகளை நினைவுக்குக் கொண்டு வரமுடியும் பெற்றோரின் அன்பின்மையால் இவ்விதம் பயிற்சிகள் கிடைக்காமல் போவதால் நுண்ணறிவு வளர்ச்சி தடைப்படுகிறது. இதனால் கற்றல் சூழலில் குழந்தையால் கவனத்தை ஒருமுகப்படுத்த முடிவதில்லை. எனவே, கற்றல் தாமதமாகிறது.

அன்பின்மை காரணமாக தன்னையொத்த குழந்தைகளுடன் கலந்தும் பழகுவதில் பிரச்சினைகள் ஏற்படுகிறது. இந்த குழந்தையின் எதிர்மறையான செயற்பாடுகளான கோபம், ஒழுங்கீனம், பிற குழந்தைகளை அடித்து விடுதல் போன்றவை காரணமாக பிறருடன் ஒத்துப்போக முடிவதில்லை. இதனால் ஏற்படும் மனக்காயங்கள் மனதில் அழுத்தமாக படிந்து விடுவதால் இந்த குழந்தையின் ஆளுமையும் (Personality) அவ்வாறு அமைந்து விட வாய்ப்புக்கள் உண்டு.

மனநலவியலாளரான Fitz asimon பெற்றோரின் வெறுப்புணர்வு நடத்தைகளைப் பின்வருமாறு விபரிக்கின்றார்.

எப்பொழுதும் பிள்ளைகளிடம் குறைபாடுகளையே காணுதல், பயமுறுத்துதல், பூட்டி வைத்தல், சிறிது நேரம் கூட அன்போடு பேசாதிருத்தல், விருப்பம் போல் எங்கு வேண்டுமானாலும் திரியவிடுதல், ஏனைய பிள்ளைகளோடு ஒப்பிட்டு இழிவுபடுத்தல், எதிர்பார்க்க முடியாத செயல்களை எதிர்பார்த்தல், பிள்ளைகளைப் பேணாது விடல், வீட்டை விட்டுத் துரத்தல்

இப்படியாக பெற்றோரின் வெறுப்பானது பல்வேறு வகையில் வெளிப்படுத்தப்படுகின்றது.

வெறுப்புணர்ச்சியால் பாதிக்கப்பட்ட பிள்ளையிடம் பின்வரும் தன்மைகள் காணப்படலாம்.

பிறரிடம் சண்டையிடுதல், கலகம் உண்டாக்குதல், விரோதம் கொள்ளுதல், பொறாமை கொள்ளுதல், பிறருக்குத் துன்பம் விளைவித்தல், தன்னைப் பிறர் கவரும்படியாகக் குறும்பு செய்தல், திருடுதல், பொய்கூறுதல், சிலவேளை வீட்டை விட்டு ஓடி விடுதல்

இச்செயற்பாடுகள் யாவும் பெற்றோரின் அமைதியைக் குலைக்க வேண்டும் எனத் தம்மை அறியாமலே பிள்ளைகள் செய்கின்றனர். நல்ல முறையில் குழந்தை வளர வேண்டுமானால் பெற்றோரின் அன்பும் கருணைப்பிடிப்பும் அவசியமாகும்.

அன்பு மட்டும் அல்லாது பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்திலும் விழுமியங்களிலும் கவனம் செலுத்த வேண்டும். ஆரோக்கியமான உடல் இருந்தால் மட்டுமே பிள்ளைகள் தமது இலக்கை அடைவர். உடற்சக்தியினை அளிக்கும் ஆகாரங்கள், புரத உணவுகளான பால், முட்டை, இறைச்சி, மீன், பருப்பு வகைகள் என்பவற்றையும் கீரை வகை என்பவற்றையும் பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டும்.

எனவே, பிள்ளைகளுக்கு நோய் நொடி, தொற்று நோய்கள் ஏற்படாது பார்த்துக் கொள்வதும் தற்சுகாதாரம், சுற்றாடற் சுகாதாரம் என்பவற்றைப் பாதுகாப்பதிலும் சரி வீத உணவைத் தெரிவு செய்து வேளை தவறாது பிள்ளைக்கு வழங்குவதும் பெற்றோரின் தலையாய கடன் ஆகும்.

ஆரோக்கியம் மிக்க, ஒழுக்கம் மிக்க குழந்தையை வளர்த்தெடுப்பதற்கு பெற்றோர் பின்வருவனவற்றைக் கடைப்பிடித்தல் மிகவும் பயனுடையதாக அமையும். பெற்றோர் குழந்தைகளிடத்தில் அன்பும் அக்கறையான கவனிப்பும் கொண்டு நடத்தல் வேண்டும்.

ஒரு குழந்தையின் சமூகமயமாக்கம் முதன்முதலில் பெற்றோரில் இருந்தே ஆரம்பமாகிறது. எனவே, பெற்றோர்கள் குழந்தைகள் மீது மிகவும் அக்கறையுடன் இருத்தல் வேண்டும். அவர்களுடைய ஒவ்வொரு உணர்வுகளையும் சரியாக புரிந்து நடந்து கொள்ள வேண்டும். பிள்ளைகளிடம் அன்பு காட்டுவது மட்டுமன்றி காட்டும் அன்பை பிள்ளைகள் உணர்ந்து கொள்ளும்படி காட்ட வேண்டும்.

தாய், தந்தையர் பெற்றோர் தங்களுக்கிடையே தொடர்பு கொள்ளும் விதம் நேர்த்தியானதாய் இருத்தல் வேண்டும். பெற்றோர்கள் எப்போதும் சண்டை பிடிக்காமல் ஒருவரில் ஒருவர் மதிப்பும் அன்பும் வைத்திருத்தல் வேண்டும். பெற்றோர்கள் எந்தநேரமும் சண்டை பிடித்தபடி இருந்தால் அது குழந்தையின் நடத்தையிலும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, அவர்கள் தமக்கிடையில் சுமுகமான உறவு நிலைகளைப் பேணிக் கொள்ளல் வேண்டும்.

பெற்றோர் சிறந்த முன்மாதிரிகளாகத் திகழ வேண்டும். குழந்தைகள் ***போலச் செய்தல்*** அல்லது பின்பற்றுவதனூடாக (Role Model) பலவற்றைக் கற்றுக் கொள்கிறார்கள். பிள்ளைகள் எப்போதும் பெரியவர்களைப் போல் தானும் ஏன் நடக்கக் கூடாதென்று விரும்புகின்றனர்.

அவர்களுக்கு நல்லது கெட்டது என்ற வித்தியாசம் எதுவும் தெரிவதில்லை. அவர்கள் தங்களைச் சுற்றி உள்ளவர்கள் செய்யும் செயல்களை, கதைப்பதை அவதானிக்கின்றார்கள். பிள்ளைகள் கூடுதலாக தங்கள் பெற்றோரின் நடத்தைகளையே அதிகம் பின்பற்றுகின்றார்கள். எனவே, பெற்றோர்கள் சிறந்த முன்மாதிரிகளாக திகழ வேண்டும்.

பெற்றோர் தமது குழந்தைகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும். பிள்ளைகள் எப்போதும் சிறுசிறு தவறுகள் புரிந்த வண்ணம் இருப்பார்கள் பெற்றோர்கள் எந்தநேரமும் குறை கூறிய வண்ணமோ அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுபவர்களாகவோ இருக்கக் கூடாது. அவர்களுடைய தவறை எடுத்துச் சொல்லி அதனால் தங்களுடைய மனம் புண்படுகின்றது என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

பிள்ளைகள் செய்யும் தவறுகளை பல பேருக்கு முன்னால் இருக்கும் போது சொல்லாமல் தனியே இருக்கும் போது சொல்ல வேண்டும். ஏனெனில் தாம் மற்றவர்கள் முன் அதிகாரம் செய்யப்படுவதையோ கட்டுப்படுத்தப்படுவதையோ பிள்ளைகள் விரும்புவதில்லை. குழந்தைகள் தன்னம்பிக்கை, சுய கௌரவம் என்பவற்றுடன் வளர்வதற்கான வாய்ப்பை பெற்றோர் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

பெற்றோர் தமது எதிர்காலத்தில் சிறந்தவர்களாக வர வேண்டும் என்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்களாக வரப்போகின்றார்கள் என்ற கருத்தை குழந்தைகளிடம் ஏற்படுத்த வேண்டும். அவர்களுடைய நற்செயல்களைப் பாராட்ட வேண்டும். அவர்களால் எல்லாவற்றையும் செய்ய முடியும் என்ற நம்பிக்கையையும் பெற்றோர் ஊட்ட வேண்டும். இதன் மூலம் அவர்கள் தாங்களாகவே எதிர்காலத்தில் எல்லாவற்றையும் எதிர்கொள்ளக் கூடிய ஆற்றலைப் பெற்று விடுவார்கள்.

பெற்றோர், குழந்தைகளுக்கு அளவுக்கதிகமான சுதந்திரத்தை வழங்குவதையும் அளவுக்கதிகமாக கட்டுப்பாடுகள் விதிப்பதையும் தவிர்க்க வேண்டும். அளவுக்கு அதிகமான சுதந்திரமும் அளவுக்கு அதிகமான கட்டுப்பாடும் பிள்ளைகள் தவறு செய்வதை தூண்டுவதாக அமையும். எனவே, பெற்றோர் பிள்ளைகள் மீது எதனையும் அளவாக செய்தல் வேண்டும்.

எனவே, பெற்றோர்கள் குழந்தைகளை பெற்றுவிட்டால் மட்டும் போதாது. அவர்களை ஆரோக்கியமானவர்களாகவும் சிறந்த பண்புள்ளவர்களாகவும் சிறந்த தலைவர்களாகவும் ஆக்குவதற்குரிய வழிமுறைகளை மேற்கொண்டு சிறந்த பிள்ளைகளை இந்த சமுதாயத்திற்கு தர முன்வர வேண்டும்,

**இராஜலிங்கம் வித்யா**
மாவட்ட சிறுவர் அபிவிருத்தி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

உதய நிலவே- நின்
உறவு வெளி வானத்தின்
உறக்கம் கலைந்ததம்மா!
உன் அயல் நட்சத்திரங்கள்
ஒவ்வொருநாள் இருளோடும்
உருகிக் கிடக்குதம்மா!
காயமே பொய்யென்று
கலைத்து விட முடியாதுன் நினைவு!
அம்மா காயத்திரி!
ஆறாத காயத்தோடெம்
அழுகுரல் கேட்காத தூரத்தில்-
அதற்கிடையில் -ஏனம்மா?

கடந்த 09.10.2012 அன்று அமரத்துவமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு அமரர் திருமதி காயத்திரி பாலமுரளீதரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 08.11.2012 வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் வில்லூரின்றி புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். அந்நிகழ்வில் கலந்து கொள்வதோடு 10.11.2012 சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நாவலர் வீதியில் அமைந் துள்ள தியாகி அறக்கொடை சொர்ணாம்பிகை மண்டபத்தில் (T.C.T) இடம்பெறும். ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மலர்வு
06.06.1970

உதிர்வு
09.10.2012



அமரர் திருமதி காயத்திரி பாலமுரளீதரன்
(ஆசிரியை, யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி)

இல.19,6ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(915)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

274

## சுட்டிப்பயல் பாலு

### அம்புலிமாமா கதைகள்



சீனுவும் பாலுவும் உடன் பிறந்த சகோதரர்கள். இருவருமே பள்ளி செல்லும் மாணவர்கள். சீனு தன் வயதையொத்த ஏனைய பிள்ளைகளைப்போல் இருக்க பாலு அளவுக்கு மீறி சுறுசுறுப்பாக இருந்தான். பல விடயங்களில் அவசரக்குடுக்கையாக இருந்து தானும் சங்கடத்தில் மாட்டிக்கொண்டு மற்றவர்களையும் அவன் கஷ்டப் படுத்தியதுண்டு.

விடுமுறைக்கு தாத்தா வீட்டுக்கு வந்திருந்த இருவரும் மகிழ்ச்சியுடன் பொழுதுபோக்கினர். சீனு தாத்தா பாட்டிக்கு பிடித்தவாறு பயனுள்ள வேலைகளைச் செய்வதுடன் அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கீழ்ப்படிந்து நடப்பான். ஆனால் பாலு வேண்டாத விடயங்களில் தலையிட்டு எப்போதும் ஏதாவது விஷமம் செய்து சிக்கலில் மாட்டிக்கொள்வான். தொல்லைபடுத்துவான்.


ஒருநாள் காலையில், பாலு எழுந்து பார்த்தால், சீனு தோட்டத்தில் தாத்தாவுடன் வேலை செய்துகொண்டிருந்தான். தோட்டத்து செடிகளுக்குத் தண்ணீர் பாயும் வண்ணம் கால்வாய் வெட்டியிருந்தனர். அந்தக் கால்வாயில் ஏகப்பட்ட களைச் செடிகள் வளர்ந்து தண்ணீர் சீராகப் பாயாமல் தடுத்தன. தாத்தா கால்வாயை மராமத்து செய்யும் வேலையை சீனுவிடம் ஒப்படைக்க, அவன் மண்வெட்டியினால் களைச்செடிகளை அப்புறப்படுத்தியதுடன், கால்வாயை ஆழமாகத் தோண்டி தண்ணீர் பாயும் படி செய்தான்.

அதைப்பாலுவுக்குக் காட்டிய தாத்தா, பார்! உன் அண்ணன் உருப்படியாக வேலை செய்கிறான். நீ விஷமம் செய்யத்தான் லாயக்கு! என்று கேலி செய்ய, பாலுவுக்கு ரோசம் ஏற்பட்டது. உருப்படியாகத் தானும் ஏதாவது வேலை செய்து காட்ட வேண்டும் என்ற உத்வேகம் பிறக்க, தாத்தாவின் அறைக்குள் புகுந்து என்ன செய்யலாம் என்று யோசித்தான்.

உடனே பாலுவுக்கு ஒரு அபார யோசனை தோன்றியது. தன்வீட்டில் அம்மா பழைய புத்தகங்களைப் பேப்பர்காரனிடம் போட்டு, காசு வாங்குவாள். அதை தான் இப்போது செய்தால் என்ன என்று தோன்றியது. உடனே, ஒரு பெரிய சாக்குப் பையில் தாத்தாவுடைய லைப்ரரிப்புத்தகங்களைத் திணித்து எடுத்துக்கொண்டு, பழைய புத்தகக் கடைக்குச் சென்று கிலோ ஐந்து ரூபாய்க்கு விற்று, வெற்றி வீரனாகத் திரும்பினான். தாத்தா! என்று கொக்கரித்த பாலு, சீனுவைப் போல் கால் காசுக்குப் பிரயோசனம் இல்லாத வேலை செய்யவில்லை இந்த பாலு! இதோ பார் நான் சம்பாதித்தது! என்று ரூபாய் நோட்டுக்களை விசிறி போல் அடுக்கி வைத்து ஆட்டினான்.

எப்படிடா சம்பாதித்தாய்? என்று தாத்தா கேட்க, பழைய புத்தகக் கடைக்காரனிடம் நம் வீட்டுக்குப்பையைப் போட்டேன். பணம் கிடைத்தது. இதை நீயே வைத்துக்கொள்! என்று பெருந்தன்மையுடன் நோட்டுகளை நீட்ட குப்பை ஏது என் ரூமில்? என்று தாத்தா கேட்க, அதுதான் புத்தக அலுமாரியில் வரிசையாக அடுக்கி வைத்திருந்தாயே! அதை எல்லாம் விலைக்குப்போட்டேன்! என்று சொல்லி முடிப்பதற்குள், தாத்தா ஆ! என்று அலற, ஐயோ! போச்சே! என் லைப்ரரி போச்சே! என்று கூச்சலிட, பாட்டியும் சீனுவும் அங்கு ஓடி வந்தனர்.

இது நடந்து சிலநாட்களுக்குப் பின், அவர்களுடைய உறவினர் ஒருவர் வீட்டுக்கு வர, எல்லோரும் தோட்டத்தில் நாற்காலி போட்டு உட்கார்ந்து பேசிக் கொண்டு இருந்தனர். அப்போது தாத்தா தன் பேரன் சீனுவைப் பற்றிப் புகழ்ந்து பேச, பதிலுக்குப் பாட்டி மற்றொரு பேரன் பாலுவின் புத்தக விற்பனை வரலாற்றைப் பிட்டுப்பிட்டு வைக்க, வந்த உறவினர் ஓஹோஹோ என்று விழுந்து விழுந்து சிரிக்க, பாலுவுக்கு ரோசம் வர, அவன் வீட்டுக்குள் சென்று விட்டான்.




உறவினர் சென்றபின், பார்த்தால் வீட்டுக்குள் பாலுவைக் காணவில்லை. எல்லோரும் வெலவெலத்துப்போய் தேடினர். பாலுவை எங்குமே காணவில்லை.

தாங்கள் மிக அதிகமாக அவனைக்கேலி செய்து விட்டதனால் கோபித்துக் கொண்டு வீட்டைவிட்டு ஓடி விட்டானோ என்று பரிதவித்துப் போயினர். கடைசியில் படுக்கையறை பரணின் மேல் பாலுவின் கால்கள் தெரிய, எம்பிப் பார்த்ததில் பாலு பரணின் மீது ஸ்டூல் போட்டு ஏறியவன் அங்கேயே தூங்கிப் போய்விட்டதைப் பார்த்தனர். மிகப் பெரிய பரண் என்பதால் அவன் அன்றிரவு அங்கேயே தூங்கட்டும் என்று விட்டு விட்டு, அவன் விழாமல் இருக்க, முன்னால் தலையணைகளை வைத்தனர்.

அன்றிரவு இரண்டு திருடர்கள் தாத்தாவின் வீட்டுக்குள் புகுந்து விட்டனர். ஒருவன் பாட்டியின் தங்கக்காசு மாலையைக் கழற்ற முயற்சிக்க, மற்றொருவன் பாட்டியை நோக்கிக் கத்தியை நீட்டினான்.

தாத்தாவும் சீனுவும் செய்வதறியாமல் திகைக்க, பாட்டியின் கூச்சலில் விழித்துக்கொண்ட பாலு, பரணிலிருந்த ஊறுகாய் ஜாடியைத் தூக்கி, கத்திபிடித்த திருடனின் தலையில் போட, அவன் மயக்கமுற்று கீழே விழ, உடனே மற்றவனை தாத்தாவும், சீனுவும் அமுக்கிப் பிடித்துக் கொள்ள, கீழே மளமளவென இறங்கிய பாலு திருடன் திருடன் என தெருவுக்குச் சென்று கூச்சலிட, அக்கம் பக்கத்தார் ஓடி வந்து இரண்டு திருடர்களையும் பிடித்து பொலிஸில் ஒப்படைத்தனர்.



அதுவரை பாலுவை கேலி செய்து வந்த தாத்தாவும் பாட்டியும் அவனை திடீரென ஹீரோ ரேஞ்சுக்கு வானளாவ உயர்த்திப் பேச, அக்கம் பக்கத்துக்காரர்களும் பாலுவை புகழ்ந்து தள்ள அன்று முதல் பாலு ஸ்பைடர் மேன் ரேஞ்சுக்குப் போய்விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்காவில் நேற்று முன்தினம் நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் பராக் ஒபாமா மீண்டும் ஜனாதிபதியாக முடிசூடியுள்ளார். இந்த வெற்றிக்களிப்பில் ஒபாமா தனது மனைவியுடன் நிற்பதையும் வெற்றிக் கொண்டாட்டங்களில் மக்கள் ஈடுபட்டிருந்ததையும் படங்களில் காணலாம்.


# ஹமா மாகாணத்தில் கார்க்குண்டு தாக்குதல்; 50 பேர் உயிரிழப்பு

(டமாஸ்கஸ்)

சிரியாவின் ஹமா மாகாணத்தில் உள்ள இராணுவ படையினர் மீது கிளர்ச்சியாளர்கள் நடத்திய கார்க் குண்டு தாக்குதலில் 50 பேர் உயிரிழந்துள்ளனர்.

இக் கார்க்குண்டு தாக்குதலில் இருவர் மட்டுமே கொல்லப்பட்டதாக சிரிய அரசு அறிவித்த போதிலும் 50 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக சுயாதீனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


இதேவேளை, தலைநகர் டமாஸ்கசில் அரசின் ஆதரவாளர்கள் அதிகம் உள்ள மேற்குப்பகுதியில் நடத்தப்பட்ட மற்றுமொரு கார்க்குண்டு தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.



இதேவேளை, கிளர்ச்சியாளர்களின் இலக்குகளை குறிவைத்து அரசாங்க படைகள் நடத்திய விமானத் தாக்குதலில் பொதுமக்கள் உட்பட 30 பேர் கொல்லப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு எல்லையில் உள்ள ஹரிம் நகரில் விமானப்படை தாக்குதலில் 20 புரட்சிப்படையினர் கொல்லப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (அ-2)

# 13 சீன மாலுமிகள் கொலை; 4 பேருக்கு தூக்குத்தண்டனை



சீன மாலுமிகள் 13 பேரை கொலை செய்த வழக்கில் நான்கு பேருக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் மெக்கோங் நதியில் வந்து கொண்டிருந்த சரக்கு கப்பல் கடந்தாண்டு ஒக்டோபர் மாதம் கடத்தப்பட்டு கப்பலில் பயணித்த 13 மாலுமிகள் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர்.

இதனையடுத்து 5 மியன்மார் நாட்டவர்கள் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மீது சீன நீதிமன்றத்தில் நடந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

இதில் மியன்மார் நாட்டை சேர்ந்த நௌஹாம் என்ற போதை மருந்து கடத்தல் கும்பல் தலைவன் உட்பட 4 பேருக்கு தூக்குத்தண்டனையும் 3 பேருக்கு எட்டு ஆண்டுகள் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது. (அ-2)

# விண்வெளி மையத்திலிருந்தே மின்னஞ்சல் மூலம் வாக்களித்த சுனிதா வில்லியம்ஸ்

(வோஷிங்டன்)

சர்வதேச விண்வெளி நிலையத்தின் பொறுப்பாளரான சுனிதா வில்லியம்ஸ் நேற்று முன்தினம் அமெரிக்காவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலுக்கு விண்வெளியில் இருந்தபடியே வாக்களித்துள்ளார்.

அதன்படி சுனிதா வில்லியம்ஸ் சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்தபடியே மின்னஞ்சல் மூலம் வாக்களித்தார்.

கடந்த 1997 ஆம் ஆண்டு சட்ட திருத்தத்தின்படி டெக்கான் மாகாணத்திலுள்ள விண்வெளி வீரர்கள் தாங்கள் இருக்கும் இடத்தில் இருந்தே மின்னஞ்சல் மூலம் ஹூஸ்டனில் உள்ள நாசா விண்வெளி மையத்துக்கு தங்களின் வாக்குகளை பதிவு செய்ய முடியும். (அ-2)

# மண்டேலாவின் படத்துடன் ரேன்ட் நாணயத்தாள்கள்



தென் ஆபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான நெல்சன் மண்டேலா புகைப்படங்களுடன் கூடிய ரேன்ட் நாணயத்தாள்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கறுப்பின மக்களுக்காக போராடியவர் நெல்சன் மண்டேலா. தற்போது இவரது புகைப்படங்களுடன்கூடிய நாணயத்தாள்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ரிசர்வ் வங்கியின் ஆளுநர் கில் மார்க்ஸ், ஒரு சிறிய கடையில் பொருட்களை வாங்கி இதனை வெளியிட்டார். அப்போது அவர் கூறுகையில், பாதுகாப்பு காரணத்திற்காகவும் புதிய தொழில்நுட்பத்தை புகுத்துவதற்காகவும் 7 ஆண்டுகளுக்கு ஒருமுறை நாணயங்களை மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

தற்போது வெளியிட்டுள்ள 10, 20, 50,100,200 ரேன்ட் நாணயங்களில் ஒரு பக்கம் மண்டேலாவின் படமும் மறுபக்கத்தில் ஏற்கனவே இருப்பது போன்று 5 பெரிய விலங்குகளின் படமும் உள்ளது. (அ-2)

# ஈரான் மீது விரைவில் போர் தொடுப்பேன்

## இஸ்ரேல் பிரதமர் எச்சரிக்கை

(தெஹிரான்)

அணுஆயுதம் தயாரிக்கும் முயற்சியில் ஈரான் தொடர்ந்து ஈடுபட்டால் அந்நாட்டின் மீது போர் தொடுக்க உத்தரவிடுவேன் என இஸ்ரேல் பிரதமர் அறிவித்துள்ளார்.

ஈரான் இரகசியமாக அணுஆயுதம் தயாரிப்பதாக அமெரிக்கா, இஸ்ரேல் உட்பட மேற்கத்தைய நாடுகள் சந்தேகப்படுவதுடன் பல்வேறு பொருளாதார தடைகளையும் விதித்துள்ளன.

இந்நிலையில் இஸ்ரேல் நாட்டின் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு கூறுகையில், நான் பிரதமர் பொறுப்பில் இருக்கும் வரை ஈரான் அணுஆயுதங்களை வைத்திருக்க முடியாது.

பொருளாதார தடையை மீறி ஈரான் அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபட்டால் அந்நாட்டின் மீது உடனடியாக போர் தொடுக்கும் உத்தரவை இடுவேன்.

ஈரான் மீது தாக்குதல் நடத்தும் எங்கள் திட்டத்தை அமெரிக்கா தான் தடுத்து நிறுத்தி வைத்துள்ளது என்று தெரிவித்தார். (அ-2)

# வன்முறையின் உச்சக்கட்டம்; குண்டுவெடிப்பில் 26 பேர் பலி

(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத்திலிருந்து 30 கி.மீ. தூரத்தில் டஜி என்ற இடத்தில் உள்ள இராணுவ முகாம் அருகில் சக்தி வாய்ந்த கார்க்குண்டு வெடித்தது.

இச்சம்பவத்தில் 26 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். 30 இற்கும் மேற்பட்டோர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று கூறப்படுகிறது.

ஈராக்கில் 2006 ஆம் ஆண்டு வன்முறை சம்பவங்கள் உச்சக் கட்டத்தில் இருந்தது. பின்னர் படிப்படியாக குறைய தொடங்கிய வன்முறை தாக்குல்கள் மீண்டும் இந்த ஆண்டு தலை தூக்க தொடங்கியுள்ளது. (அ-2)

# உலக தரிசனம்

# சிரிய இராணுவத் தளபதிகள் 7 பேர் துருக்கியில் தஞ்சம்

(டமாஸ்கஸ்)

சிரிய நாட்டை சேர்ந்த இராணுவ தளபதிகள் ஏழு பேர் துருக்கி நாட்டில் தஞ்சம் அடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

போராட்டக்காரர்களை ஒடுக்க சிரிய இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் அப்பாவி பொது மக்கள் உட்பட போராட்டக்காரர்கள் 25 ஆயிரம் பேர் வரை பலியாகி உள்ளனர்.

மேலும் 2 இலட்சத்துக்கும் அதிகமான நபர்கள் அயல் நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இந்நிலையில் சிரிய நாட்டின் இராணுவத் தளபதிகள் ஏழு பேர் துருக்கியில் தஞ்சம் அடைந்துள்ளதாக துருக்கி அரசு தெரிவித்துள்ளது.

இவர்கள் போராட்டக்காரர்களுடன் இணைந்து போராட திட்டமிட்டுள்ளதாகவும் துருக்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வமத குழுவினர் யாழ். போதனாவின் பணிப்பாளருடன் கலந்துரையாடினர்





(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பில் நேற்று யாழ். வந்திருந்த சர்வமத குழுவினர் ஆராய்ந்தனர்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு பி.ப 2 மணியளவில் விஜயம் செய்திருந்த இக்குழுவினர் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருடன் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினருடனும் கலந்துரையாடியிருந்தனர். இதில் சர்வமத குழுவினறால் பின் வரும் கேள்விகள் கேட்கப் பட்டன.

யாழ்.போதனா வைத்தியசாலையின் சேவை எவ்வாறு உள்ளது எனக் கேட்டதற்கு தற்போது ஜப்பான் நிதியுதவியுடன் கட்டப்பட்டிருக்கும் கட்டடம் திறந்து வைக் கப்பட்டன. வைத்தியசாலை சேவை பூரணமாக சென்றடையும்.

யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் தனியார் வைத்தியசாலையிலும் சிகிச்சையளிக்கின்றனரா? என கேட்டதற்கு தனியார் வைத்தியசாலைகளில் உரியதரம் வாய்ந்த வைத்தியர்கள் பற்றாக்குறையினால் இங்குள்ள வைத்தியர்கள் அங்கு சென்று கடமைபுரிகின்றனராம் என பதிலளிக்கப்பட்டது.

வைத்தியசாலையில் ஆளனிவளம் போதியளவு காணப்படுகின்றதா என கேட்டப்பட்டபோது இங்கு தாதியர் பற்றாக்குறையை அவர்களிற்கு சுட்டிக்காட்டப்பட்டதோடு ஆயிரத்து 500 தாதியர்ககள் கடமையாற்ற வேண்டிய நிலையில் 500க்கும் குறைவான தாதியர்களே கடமையாற்றுகின்றனர் என் பதிலளிக்கப்பட்டது.

வைத்தியசாலையில் ஏன் சன நெருக்கடி அதிகமாக காணப்படுகின்றது என கேட்டபோது உங்கள் நாடுகள்பின்பற்றும்முறையில் இங்குபின்பற்றப்படுவதில்லை எனவும் சிறுவர் பராமரிப்பு தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை எத்தகைய பங்களிப்பினை கொண்டுள்ளது என கேட்டதற்கு அது மாகாண சபையின் பொறுப்பென்றும் கூறப்பட்டது.

சந்திப்பின்முடிவில்யாழ்.போதனா வைத்தியசாலைக்கு தேவையான 90 இலட்சம் பெறுமதியான எரிக்கும் இயந்திரம் தேவையாக உள்ளமை மற்றும் அபிவிருத்தி தொடர் பிலான அறிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று யாழ்.போதனா வைத்திய சாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸ்ரீ பவானந்தராஜாவினால் கையளிக்கப்பட்டது.

பின்னர் நோயாளர் விடுதிகளுக்கு சென்று பார்வையிட்டதோடு ஜப்பான் நாட்டினால் கட்டிக் கொடுக்கப்பட்ட புதிய கட்டடத்தினை பார்வையிட்ட சர்வமத குழுவினர் இதே போன்றதொரு கட்டடத்தினை யாழ். போதனாவின் வைத்தியர்கள் இணைந்து கட்டித்தரமாட்டார்கள் எனவும் கேட்டனர். அதற்கு பணிப்பாளரின் புன்னகையே பதிலாக அமைந்தது. (அ-4)

## வாழ்வின் எழுச்சி வர்த்தக கண்காட்சி

யாழ். மாவட்ட சமுர்த்தி அலுவலகத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் வாழ்வின் எழுச்சிக்கு (திவநெகும) சமுர்த்தி சக்தி எனும் தொனிப்பெருளிலான வர்த்தக கண்காட்சி எதிர்வரும் 10,11 ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் கலந்து கொண்டு கண்காட்சியினை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஆர். பி.வி. திலகசிறி, வாழ்வாதார பணிப்பாளர் எம். நடேசராஜா, யா/ வேம்படி மகளிர் உயர் தரப்பாடசாலையின் அதிபர் திரு மதி வேணுகா சண்முகரத்தினம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இங்கு சமுர்த்தி பயனாளிகளின் உற்பத் திப் பொருட்களை காட்சிப் படுத்துவ தோடு விற்பனையும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

# அகதி அந்தஸ்து கோரிய 30பேர் நாடு கடத்தப்பட்டனர்

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா சென்று புகலிடக்கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் 30 இலங்கை இளைஞர்கள் நேற்றைய தினம் நாடு கடத்தப்பட்டதாக அவுஸ்திரேலியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த புகலிடக்கோரிக்கையாளர்களிடம் அவுஸ்திரேலியாவின் புகலிடக்கோரிக்கையாளர்கள் தொடர்பான சர்வதேச சட்டதிட்டங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டதாக அமைச்சர் கிறிஸ்போவன் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான சட்டதிட்டங்களுக்கு அமைய செல்லுபடியற்ற விசா மற்றும் அவுஸ்திரேலியாவில் தங்கியிருக்க தகுதியின்மை உள்ளிட்ட காரணங்களால் குறித்த இலங்கையர்களது புகலிடக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுவரை இந்த ஆண்டு அவுஸ்திரேலியாவிற்குச் சட்டவிரோதமாக செல்லமுயன்ற சுமார் 3 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# 13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்ய கைகோர்க்கும் இனவாதக் கட்சிகள்

## அமைச்சர் வீரவன்ச தெரிவிப்பு

13 ஆம் திருத்தச்சட்டத்தை இரத்து செய்ய அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இத்திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் ஜாதிக ஹெல உறுமய கட்சியுடன் இணைந்து நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் ஜனநாயகத்திற்கு முரணாண வகையில் இந்தியாவி னால் 13 ஆம் திருத்தச் சட்டம் நாட்டுக்குள் திணிக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சிக்குள் அங்கம் வகித்துக் கொண்டே 13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு எதிரான போராட்டம் முன்னெடுக்கப்படும்.

13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்யும் நோக்கில் முன்னெடுக்கப்படும் போராட்டத்திற்காக ஜாதிக ஹெல உறுமய கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளோம் என விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இதே வேளை வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றியீட்டினால் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களைக் கோரி நீதிமன்றில் வழக்குத் தொடரக்கூடிய அபாயம் காணப்படுகின்றது என மின்சக்தி மற்றும் எரிக்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.எனவே 13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய் வது காலத்திற்கு பொருத்தமான தாகும்.

13 ஆம் திருத்தச்சட்டத்தை இரத்து செய்வது தொடர்பிலும் ஆளும் கட்சிக்குள் இருந்து கொண்டே போராடப் போவதாக சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (அ-2)

# வடமராட்சி பகுதிக்கு லக்ஷபான மின்சாரம்

(கரவெட்டி)

வடமராட்சிப் பகுதிக்கு லக்ஷபான மின்சாரம் வழங்கும் நிகழ்வு நேற்றுக்காலை வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு முன்பாக உள்ள மின்னிணைப்பு நிலையத்தில் நெல்லியடி உப மின்சாரசபை மின் அத்தியட்சகர் எஸ். இராஜேஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.வடமராட்சி பிரதேசத்திற்கு 25 வருடங்களுக்குப் பின் லக்ஷபான மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. வடமராட்சியில்உள்ள சில பிரதேசங்களுக்கு மட்டுமே முதற்கட்டமாக மின்சாரம் வழங்கப்பட்டது.

ஏனைய பிரதேசங்களுக்கு படிப்படியாக மின்சாரம்வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிகழ்விற்கு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், வடமராட்சி ஈ.பி.டி.பி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-3-24)

# 2014 இல் ஜனாதிபதி தேர்தல் நடைபெறக் கூடிய சாத்தியம்

## ஐக்கிய தேசிய கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் 2014 ஆம்ஆண்டு நடைபெறக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து ஐக்கிய தேசியக் கட்சி பாரியளவில் ஒழுங்கமைப்பு பணிகளை ஆரம்பிக்கவுள்ளது. 18 ஆம் திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மீளவும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியும்.

எனவே 2014 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு அடிமட்டத்திலிருந்து தொகுதி அமைப்புக்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. தற்போதைய கட்சித்தலைவரின் பதவிக்கால த்தை மேலும் ஆறு ஆண்டுகளுக்கு நீடிக்க செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறும் கட்சியின் பொதுச்சபைக்கூட்டத்தில் இதுகுறித்த யோசனை முன்வைக்கப்படும் எனவும் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

மாற்றுக் கருத்துக்களை வெளியிட அனைவருக்கும் சந்தர்ப்பம் காணப்பட்ட போதிலும் வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய பிரதமர் பதவிக்கு முதல்வர் 'ஜெ' பொருத்தமானவர்

## பிரான்ஸ் பத்திரிகை சுட்டிக்காட்டு

இந்தியாவில் பிரதமராக பொறுப்பேற்று நாட்டை வழி நடத்திச் செல்வதற்கு ஜெயலலிதா தகுதியானவர் என்று பிரான்சின் யூரோ கிரியேட்டிவ் என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது.

வெளிநாட்டுப் பத்திரிகை புகழாரம் சூட்டும் அளவிற்கு ஜெயலலிதா தன் ஆட்சி அதிகாரத்தின் திறனை உலகம் முழுவதும் தெரியும்படி காட்டியிருக்கிறார் என்பது இதன் மூலம் தெரியவருகிறது.

இவரின் புகழ் உலகப் புகழ் பெற்றதால் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் இவரைச் சந்தித்து அவரின் நிர்வாக திறமையை பாராட்டியும் தீவிரவாதத்தை எதிர்த்து முதலில் குரல் கொடுத்ததற்காகவும் இவரது ஆட்சி நிர்வாகத்தைப் பற்றி பாராட்டிச் சென்றார்.

தமிழ்நாட்டில் சுற்றுலாவரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு பாதுகாப்பு உள்ளது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்பு இந்தியாவில் 15 ஆண்டுகாலம் பிரதமராக இந்திரா காந்தி அம்மையார் இருந்தார்கள்.

பெண்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லாத இந்தியாவில் பிரதமர் இந்திராகாந்திக்குப் பின்னர் எந்தவொரு பெண்ணும் பிரதமராக வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

நீங்கள் தன்னலத்தை துறந்தவர்களா? அப்படியாயின் உங்களை எதிர்க்கும் சக்தி ஒன்றுமில்லை.
*~ விவேகானந்தர்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அடுத்தவரின் நலன்பற்றி நாம் சிந்திப்பது எப்போது?

தமிழர்களின் திண்ணை வீட்டுப் பண்பாடு பற்றி சமகாலத்துப் பிள்ளைகள் அறிந்திருக்க நியாயமில்லையாயினும் எங்கள் பண்பாட்டின் உயர்வு பற்றி அறிய வேண்டுமாயின் வீட்டுத் திண்ணைபற்றி அறிவது அவசியமானதாகும்.

வீதியால் பயணிப்பவர்கள் களைத்துவிட்டால் யார் வீடாயினும் சரி, அந்த வீட்டின் திண்ணையில் தங்கி களைபாற முடியும்.

அந்தளவிற்கு மற்றவர்களுக்கு உதவும் மனநிலை எங்களிடம் தாராளமாக இருந்தது. கூடவே மக்கள் நடமாட்டம் குறைவான வீதிகளில் சுமைதாங்கி என்பதைக் கட்டி வைத்திருப்பார்கள்.

தலையில் பாரத்தை சுமந்து செல்பவர் களைத்துவிட்டால், பாரத்தை கீழே இறக்கிவ்வைத்துவிட்டு ஓய்வு எடுப்பார்கள்.

களைப்பாறிய பின் மீண்டும் பயணத்தை தொடர வேண்டுமாயின் கீழே இறக்கி வைத்த பாரத்தை தூக்கி தலையில் வைக்க வேண்டும்.

அச்சமயம் அவ் வீதியால் யாரேனும் வருவார்களாயின் அவர்களின் உதவியுடன் பாரத்தைத் தூக்கி தலையில் வைத்து பயணத்தைத் தொடர முடியும்.

மாறாக அவ் வீதியால் எவரும் வராத சூழ்நிலையில் தனித்துப் பாரத்தைத் தூக்குவதென்பது முடியாத காரியமாக இருக்கும். இத்தகைய நிலையில் பாதசாரிகள் கஷ்டப்படுவார்கள் என்பதன் காரணமாக வீதியோரங்களில் சுமைதாங்கிகளை அமைத்து வைத்தார்கள்.

மற்றவர்கள் இடஞ்சல் படக் கூடாது என்பதற்காக சுமைதாங்கி கட்டி வைத்த எங்கள் தமிழ்ப் பரம்பரை இன்று அடுத்தவனின் வளவுக்குள் குப்பையைக் கொட்டுகிறது.

சாராயப் போத்தலை வீதியில் போட்டு உடைக்கப்படுகிறது. சந்திகளில் வீட்டுக்குப்பையை கொட்டி நாசம் செய்கிறது.

இத்தகைய மனநிலையில் எங்கள் இனம் விடிவுகாண முடியாமல் தவிக்கிறது என்ற உண்மையை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்.

எங்கள் உரிமையை மற்றவர் பறிப்பது அதர்மமானது என்பது எத்துணை உண்மையோ அந்தளவிற்கு நாம் மற்றவர்களின் உரிமையைப்பறிப்பதும் அதர்மானது என்ற உண்மையை முதலில் நாம் நமக்குள் உணர்ந்தாக வேண்டும்.

ஆக சமகாலத்தில் எங்கள் வாழ்வென்பது சுயநலமிக்கதாக, மற்றவர்களைப் பற்றி இம்மியும் கருத்தில் கொள்ளாததாக மாறியிருப்பதை காண முடியும்.

இந்நிலைமை நீண்டு செல்லுமாயின் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை.

## புலிகளின் முன்னாள் உறுப்பினர் மட்டக்களப்பில் கைதானார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் தலைமறைவாகியிருந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு நொச்சிமுனை ஆறாம் குறிச்சிப் பகுதியில் வைத்து காத்தான்குடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் பல கொள்ளைச்சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் அவருக்கு எதிராக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் பகிரங்க பிடியாணை பிறப்பித்திருந்தது.

இந்நிலையில் கடந்த 10 மாதங்களாக அவர்தலைமறைவாகியிருந்துள்ளார்.

பால்குடியன் அல்லது கிளியரசன் என்ற இயக்கப் பெயரைக்கொண்ட குமாரசாமி லிங்கேஸ்வரன் என்ற முன்னாள் புலி உறுப்பினரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆறுக்கும் அதிகமான கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் மூன்று வீடுடைப்புச் சம்பவங்கள் தொடர்பில் இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்ததாக காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து பல பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் காத்தான்குடிப் பொலிஸார் குறிப்பிட்டனர். (எ-11)

## விஞ்ஞான தினம்

(வேலணை)

தீவக கல்விவலய விஞ்ஞானதினம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ற்ரன் கல்லூரியில் நடைபெறும்; தீவகம் வலயக்கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வடமாகாண கல்வி அபிவிருத்திப் பிரதிக்கல்வி பணிப்பாளர் வ.ஸ்ரீஸ்கந்தராசா பிரதம விருந்தினராகவும் ஓய்வு நிலை வலயக்கல்விப் பணிப்பாளர் ஜி.வி.ராதாகிருஸ்ணன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். (எ)

# காணாமல் போனோரின் உறவுகளுக்கு நிவாரணம் வழங்க அரசு தவறியுள்ளது

## ஐ.நாவுக்கு கடிதம் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்யவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவும் அரச நிறுவனங்கள் தவறியுள்ளன என ஜனாதிபதிக்கும் ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கும் முக்கிய நிறுவனங்களுக்கும் விசாரணைக் குழுவின் செயலாளர் எஸ்.மகேந்திரன் எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் காணாமல் போதல் பற்றிய ஐ.நாவின் செயற்குழுவை இலங்கைக்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யுமாறு ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் அது தொடர்பில் ஆவன செய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமும் காணாமல் போனமை தொடர்பான இலங்கை விசாரணைக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடத்தல்களிலிருந்து சகலரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயத்தில் இலங்கை கையொப்பம் இடவேண்டும் எனவும் இலங்கையில் இடம்பெற்ற காணாமல் போன சம்பவங்களை ஆராய ஒரு சுதந்திரமான ஆணைக்குழுவை அமைக்குமாறு நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகளை செய்துள்ளன.

அதனைப் பூரணமாக செயற்படுத்த வேண்டும் எனவும் அந்த அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

காணாமல் போனமை தொடர்பான விசாரணைக் குழுவின் செயலாளர் எஸ்.மகேந்திரன் மற்றும் காணாமல் போயுள்ள ஊடகவியலாளரான எக்னெலிகொடவின் மனைவி ஆகியோர் பொலிஸ் மற்றும் மனிதவுரிமைகள் ஆணைக்குழு உட்பட அரச நிறுவனங்கள் காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்யவும் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்கவும் தவறியுள்ளன என ஜனாதிபதிக்கும் ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கும் முக்கிய நிறுவனங்களுக்கும் எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

காணாமல்போன குடும்பங்களின் அங்கத்தவர் நாம் என்ற வகையில் எமது அன்புக்குரியவர்கள் எங்கோ உள்ளனர் என்பது தெரியாமலும் அவர்களின்கதி என்னவாயிற்று என்பது தெரியாமலும் பெரும் துன்பத்தில் ஆழ்ந்து பரிதவிக்கின்றோம் என அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (எ-11)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வைப் பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

இந்து தர்மாசிரியர் சான்றிதழ் வழங்கும் வைபவம் பிற்போடப்பட்டுள்ளதாக இந்து கலாசார அலுவலக திணைக்களப் பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

கடந்த 2005ஆம் ஆண்டு முதல் இந்து தர்மாசிரியர் பரீட்சைக்கு தோற்றி 5 பாடங்களிலும் முழுமையாக சித்தியடைந்தோருக்கு வரும் டிசம்பர் மாதம் 9ஆம் திகதி கொழும்பில் சான்றிதழ் வழங்கும் வைபவம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.


தற்போது தவிர்க்க முடியாத காரணத்தால் மேற்படி வைபவம் பிற்போடப்பட்டுள்ளது என இந்து சமய கலாசார அலுவலக திணைக்கள பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

சான்றிதழ் பெறுவதற்கு தகுதியுடையவர்களுக்கு வைபவம் நடைபெறும் திகதி தொடர்பாக கடிதம் மூலம் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

## சத்திய தரிசனம்



தெய்வீகத்தை அடைய நீங்கள் எவ்வித கடினமான ஆன்மீக சாதனைகளைச் செய்யத் தேவையில்லை. நீங்கள் உண்ணாமல் விரதம் இருப்பதோ எதுவும் தேவை இல்லை. அவர்மீது உங்கள் இதயத்தின் அடிப்பகுதியிலிருந்து அன்பு செலுத்துங்கள். பாவம் செய்யத்துணியாதீர்கள். சமுதாயத்தில் ஒழுங்கு, கட்டுப்பாடு வளர உதவ வேண்டும்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### அமாவாசை விரதம் ஆசீர்வாதம் பெற்றுத்தருமா?

விரதங்களை ஆசிரிப்பது நம் முன்னோர்கள் தம் வாழ்க்கையின் பாகமாகவே கருதியிருந்தனர். இறைவன் அருளுக்குப் புறமே. இதுபோன்ற விரதங்கள் நித்திய வாழ்வில் செலுத்தும் செல்வாக்கை அறிந்திருந்தனர் பண்டையமக்கள்.


செல்வம், உடல்நலம், சந்ததிச்செல்வம் முதலியவை பலனாகக் கிடைக்குமாறு கடைப்பிடித்திருந்த அமாவாசை விரதத்தை குறித்து நம் பண்டைக்காலத்து மக்களுக்கு சில உண்மைகளும் தெரிந்திருந்தன.

காலை புண்ணிய தீர்த்தத்தில் குளித்தபின் பலி அர்ப்பணம் செய்தல், ஒருவேளை விரதம் முதலியவை அனுசரித்திருந்தனர். ஆடி, தை, மாசி, ஐப்பசி மாதங்கள் வரும் அமாவாசை மிக முக்கியமானதாக நினைத்திருந்தனர். அமாவாசைக்கு முன்தினமும் அமாவாசை அன்றும் ஒரு வேளையே உணவருந்துவதுண்டு.

அமாவாசையன்று சந்திரனில் ஒளியில்லாத பாகம் பூமிக்கு நேருக்கு நேராக வருகின்றது. இது மனித உடலில் சில பாதிப்புக்கள் உண்டாக்குகின்றது.

இதில் விளையக்கூடிய தீங்குகளைத் தவிர்க்கவே அமாவாசை விரதம் விதித்திருக்கலாம். சந்திரனுக்குப் பூமியில் பாதிப்புண்டாக்கலாம் என்பதற்கு ஒரு நல்ல உதாரணம் கடல் வேலியேற்றமும் வேலி [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தேசிய மட்ட கராத்தே போட்டி

இலங்கை கராத்தே சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெறவுள்ள தேசிய கராத்தே சுற்றுப்போட்டியில் கிழக்கு மாகாணத்திலிருந்து 85 போட்டியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த அறிவிப்பை கிழக்கு மாகாண கராத்தே சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் முஹமட் இக்பால் மேற்கொண்டார்.

இதன்போது 6-13 வயதுக்கிடைப்பட்ட பிரிவிலும் 14-15 கடேற் பிரிவிலும் 16-17 வயது கனிஷ்ட பிரிவிலும் 18 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரிவிலும் பட்டி நிறம் நிறை அடிப்படையில் போட்டிகள் நடைபெறுகின்றன.

இப்போட்டியில் இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் நடைபெற்று முடிந்த மாகாண மட்ட சுற்றுப்போட்டிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

# கோட்டமட்ட காற்பந்துப் போட்டி; சென்.பற்றிக்ஸ் கல்லூரி சம்பியன்



யாழ்ப்பாணக் கோட்ட 16 வயதுப் பிரிவினருக்கான காற்பந்தாட்டப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியனாகியுள்ளது.

யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான காற்பந்தாட்டப் போட்டிகளின் 16 வயதுப் பிரிவினருக்கான இறுதி மற்றும் மூன்றாமிடத்திற்கான போட்டி நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.


இறுதிப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினை எதிர்த்து சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அணி மோதியது. தொடக்கம் முதல் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. இருந்தும் கிடைத்த கோல் போடும் சந்தர்ப்பங்களை அந்த அணி தவறவிட்டது. முதல் பாதி ஆட்டம் கோல் எதுவும் போடாத நிலையில் முடிவுற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் சென்.ஜேம்ஸ் அணியின் ஆதிக்கம் வலுப்பெற்றது. சரியான கோல் அடிக்கும் வாய்ப்புக்களை அந்த அணி சொதப்பியது: இறுதிவரை இரு அணிகளும் கோல் எதனையும் போடவில்லை.

போட்டியின் சம்பியனை தீர்மானிக்க ஆட்டம் பனால்டி உதையை நோக்கிக் கொண்டு செல்லப்பட்டது. பனால்டி உதைகளை சரியாகப் பயன்படுத்திக் கொண்ட சென். பற்றிக்ஸ் கல்லூரி 7:6 என்ற கோல் கணக்கில் வென்றது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணிக்கும் சென்.ஜோன் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெறறது. இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வென்று மூன்றாமிடத்தை பெற்றுக்கொண்டது.

# தேவாலயங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி கல்வாரி ஈகிள்ஸ் புளு அணி சம்பியன்







தேசிய கிறிஸ்தவ ஐக்கியத்துவத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்.மாவட்டத்திலுள்ள தேவாலயங்களுக்கிடையில் நடத்தப்பட்ட ஆறுபேர் கொண்ட ஐந்து பந்து பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் உடுவில் அப்போஸ்தலர் அணியை இலகுவாகத் தோற்கடித்து கல்வாரி ஈகிள்ஸ் புளு அணி கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற கல்வாரி ஈகிள்ஸ் அணியின் தலைவர் ஜோன் வின்ஸ் லோ முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கல்வாரி ஈகிள்ஸ் புளு அணியினர் ஐந்து பந்துப் பரிமாற்றங்களில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 62 ஓட்டங்களைப் [illegible] இதில் அதிகபட்சமாக ஆரம்பத்துடுப் [illegible] எஸ்.பிரசன்னா 30 ஓட்டங்களையும் ஆர்.ரஜிந்தன் 12 ஓட்டங்களையும் இ.நிரோஜன் 11 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் ஜே.வெஸ்லி மற்றும் எஸ்.தர்ஷன் ஆகியோர் ஒரு விக்கெட்டுக்களைச் சாய்த்தனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அப்போஸ்தர் அணியினர் நான்கு பந்து பரிமாற்றங்களில் 23 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியடைந்தனர். பந்துவீச்சில் ப.கௌசிகன், ச.சுயேந்திரன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் எஸ்.பிரசன்னா ஒரு விக்கெட்டையும் கைப்பறினார்கள். இப்போட்டியின் ஆட்டநாயகனாக 30 ஓட்டங்களைக் குவித்து ஒரு இலக்கினை கைப்பற்றிய பிரசன்னா தெரிவு செய்யப்பட்டார். வெற்றிபெற்ற அணிக்கான கேடயத்தை யாழ்.மாவட்ட போதகர் ஐக்கியத் தலைவர் வண. றேபேட் வழங்கினார்.

பரிசு வழங்கும் நிகழ்வுகளில் கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயத்தின் யாழ்.பிராந்திய நிறைவேற்றுப் போதகர் வண.வீ.கனகராஜா, தேசிய கிறிஸ்தவ ஐக்கியத்துவத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ம.பிரபோஸ்- ஜீவ ஒளி மிஷன் போதகர் குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறிமியர் லீக் கால்பந்து சமனிலையில்



நியூகேசில் யுனைடெட், லிவர்பூல் அணிகள் மோதிய பிறிமியர் லீக் கால்பந்துப் போட்டி சமனில் முடிந்தது.

இங்கிலாந்தில் பிறிமியர் லீக் கால்பந்து தொடர் நடைபெற்று வருகிறது. லிவர்பூர் நகரில் நடந்த லீக் போட்டியில் நியூகேசில் யுனைடெட், லிவர்பூர் அணிகள் மோதின. முதல் பாதியின் 43ஆவது நிமிடத்தில் நியூகேசில் வீரர் யோகன் கபில் ஒரு கோல் அடித்தார். இதற்கு லிவர் கூல் அணி வீரர்களால் பதில் அடி கொடுக்க முடியவில்லை.

பின் இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட லிவர்பூல் அணிக்கு லூயிஸ் 67ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். நியூகேசில் வீரர்கள் போராடியும் கோல் அடிக்க முடியவில்லை. 1:1 என்ற கணக்கில் போட்டி வெற்றி தோல்வியின்றி சமனில் முடிந்தது.

குயின்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ், ரீடிங் அணிகள் மோதிய மற்றொரு லீக் போட்டியில் 1:1 என்ற கோல்கணக்கில் சமனானது.

## புதிய விதிகள் பந்துவீச்சாளரை பாதிக்கும் - இலங்கை அணித் தலைவர் மஹேல

சர்வதேச கிரிக்கெட் வாரியத்தால் (ஐ.சி.சி.) ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் பந்து வீச்சாளர்களுக்கு எதிரானதாக உள்ளதாக இலங்கை அணியின் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.



சர்வதேச கிரிக்கெட் வாரியத்தின் புதிய மாற்றங்களின் படி ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பவர்பிளே அல்லாத ஓவர்களில் 30 யார் வட்டத்திற்கு வெளியே 4 வீரர்களை மட்டும் களத்தடுப்பில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் இது 5 களத்தடுப்பாளர்களாக காணப்பட்டது.


இது குறித்து ஜெயவர்த்தனா கூறுகையில், இந்த மாற்றம் துடுப்பாட்ட வீரர்களுக்கு பெரிதும் சாதகமாக உள்ளது.

ஆனால் இந்த மாற்றம் கிரிக்கெட்டுக்கு எதிரானதென்றும் சுழற்பந்து வீச்சாளர்கள் அதிகமாக பாதிக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் வாரியத்தால் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியிலேயே முதல் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

மேலும் அப் போட்டியில் இலங்கை அணி டக்வேத் லூயிஸ் முறையில் 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்திரேலிய அணியால்தான் சிறந்த வீரராக மாறினேன்-சச்சின்



இந்தியக் கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு அவுஸ்திரேலிய அரசின் ஆடர் அப் அவுஸ்திரேலிய என்ற உயரிய விருது வழங்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மும்பையில் நடந்த நிகழ்ச்சியில் அவுஸ்திரேலிய மந்திரி சிமோன் பிரியன் இந்த விருதை வழங்கினார்.

விழாவில் பேசிய சச்சின் கூறுகையில், கடந்த 1991 - 1992 இல் அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தில் நான் முதன்முறையாக விளையாடினேன். இந்தப்பயணம் முற்றிலும் என்னை ஒரு சிறந்த கிரிக்கெட் வீரராக மாற்றியது.

இது என் வாழ்க்கையில் முக்கிய தருணமாக அமைந்தது. இனி உலகின் எந்த அணிக்கெதிராகவும் விளையாட நான் தயாராகி விட்டதாக நினைத்தேன் இவ்வாறு என்னை மிகவும் சவாலான வீரராக மாற்றியதில் அவுஸ்திரேலியாவின் சில பங்களிப்பும் உண்டு.

அவுஸ்திரேலிய வீரர்கள் மன வலிமையுடன் மிகச் சிறப்பாக விளையாடக் கூடியவர் என்றும் அவுஸ்திரேலியாவில் டான் பிராட்மேனின் 90ஆவது பிறந்தநாளில் பங்கேற்று அவரை வாழ்த்தியது மறக்க முடியாத அனுபவம் எனக் கூறியுள்ளார்.

# இங்கிலாந்துக்கு எதிரான தொடர் பழி வாங்கும் போட்டியல்ல - ஷேவாக்

இங்கிலாந்துக்கு எதிரான 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி பங்கேற்க உள்ளது.


இந்திய அணி கடந்தாண்டு இங்கிலாந்து மண்ணில் 0:4 என்ற கணக்கில் தோற்றது. எனவே இந்தத்தொடரை இந்திய அணி பழி வாங்கும் தொடராகக் கருதும் என்று கூறப்படுகிறது.

இதை மறுத்த இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஷேவாக் கூறுகையில்,

இங்கிலாந்துத் தொடரை நாங்கள் பழி வாங்கும் தொடராக கருதவில்லை. பழி வாங்குவதற்காக நாங்கள் இங்கு வரவில்லை.

களத்தில் அபாரமாக விளையாடி, அணிக்காகவும், நாட்டுக்காகவும் வெற்றி பெற வேண்டும் என்பதில் கவனம் செலுத்தி வருகின்றோம்.

இந்த டெஸ்ட் தொடரை வெல்ல வேண்டும் என்பதே எங்களது முக்கிய இலக்கு. இங்கிலாந்து சவால் அளிக்கக்கூடிய நல்ல அணி, நாங்களும் சிறந்த அணியாகவே விளங்குகிறோம்.



எனவே, இந்தத்தொடர் இரண்டு அணிக்கும் கடினமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

இந்தத் டெஸ்ட் தொடர் எப்போது தொடங்கும் என்ற ஆவலுடன் காத்திருக்கிறோம். இதற்கு தயாராகும் வகையில் வருகிற நாளை எங்களுக்கு பயிற்சி முகாம் தொடங்குகிறது.

உத்தரபிரதேச அணிக்கெதிரான ரஞ்சி கிண்ண ஆட்டத்தில் சதம் அடித்தும், எங்களது அணி (டெல்லி) சமன் செய்ய முடியாமல் போனது ஏமாற்றம் அளிக்கிறது.

இந்த ஆட்டத்தின் போது எனது விரலில் காயம் ஏற்பட்டது. விரலின் நிலைமையில் முன்பை விட முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் தற்போது நன்றாக இருப்பதாக உணருகிறேன் எனவும் கூறியுள்ளார்.

# அவுஸ்திரேலியா முதலிடத்துக்கு வரும் ரிக்கி பொன்டிங் நம்பிக்கை

தென்னாபிரிக்க அணியின் நம்பர்-1 இடத்தை தட்டிப்பறிப்போம் என்று அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் கூறியுள்ளார்.

டெஸ்ட் தரவரிசையில் தென்னாபிரிக்கா தற்போது நம்பர்-1 ஆக உள்ளது. அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இந்தத்தொடரில் தென்னாபிரிக்காவே பலமான அணி. வெற்றி பெறும் அணி என்றும் கூறப்பட்டு வருகிறது. இந்நிலையில் ரிக்கி பொன்டிங் கூறுகையில்,


இந்தத்தொடரில் நாங்கள் குறைவாக மதிப்பிடுவது பற்றி எதிர்மறையாக சிந்திக்க வேண்டியதில்லை. தென்னாபிரிக்க அணி நம்பர்-1 இடத்தில் இருப்பதற்கு தகுதி பெற்ற அணியே.

ஆனால் அந்த அணிக்கும் எங்கள் அணிக்கும் இடைவெளி பெரிதாக இல்லை. நாங்கள் நம்பர்-1 ஆக இருந்தபோது அனைவரும் எங்களைத் துரத்தி வந்தனர்.

ஆனால் நாங்கள் நீண்டகாலம் சிறந்த கிரிக்கெட்டை ஆடி, பலமாக மோதினால் தென்னாபிரிக்காவுக்கெதிராக அவுஸ்திரேலியா சிறப்பாக ஆடியுள்ளது என்றே கூறுவேன்.

எது எங்கள் அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்கிறது என்பதை நாங்கள் அறிவோம். கடந்தாண்டு இந்தியாவுக்கெதிராக பந்துவீசிய பற்றின்சன், சிடில், ஸ்ரார்க் போன்ற வரிசையையே இப்போதும் வைத்துக் கொள்வோம்.


கடந்த ஆண்டு இந்தியாவுக்கெதிராக விளையாடியது [illegible] 20 விக்கெட்[illegible] நம்பர்-1 இடத்தைப் பிடிப்போம் எனவும் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் ஆணையை கொள்ளையடித்தே 13-வது திருத்தம் நிறைவேற்றப்பட்டது

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு



மக்களின் ஆணையை கொள்ளையடித்தே மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் 13-வது திருத்தம் உயர்நீதிமன்றத்தின் முரண்பாடுகளுடன் நிறைவேற்றப்பட்டது. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட 13-வது திருத்தத்தினால் 62 ஆயிரம் பேர் பலியெடுக்கப்பட்டனர் என்று ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அதுரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணி மற்றும் ஹெல உறுமய ஆகியன இணைந்து தேசிய நூலக ஆவணாக்கல் சபை கேட்போர் கூடத்தில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டமையினால் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் சமாதானமாக பேசுவதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. இந்நிலையில் மூவின மக்களும் சமாதானமாக வாழ்கின்றனர்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அரசியலமைப்பை திருத்த வேண்டும். 13-வது திருத்தம் 62 ஆயிரம் பேரை பலியெடுத்தே அரசியலமைப்புக்கு முரண்பட்ட வகையில் நிறைவேற்றப்பட்டது என்றார். (எ-11)

## ஒபாமா...

மேலும் 4 ஆண்டுகளுக்கு அதிபர் பதவியில் நீடிப்பார்.

அமெரிக்க அதிபர் தேர்தலுக்கு வாக்குப்பதிவு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. வாக்குப் பதிவு நிறைவடைந்த பிறகு வாக்குகள் எண்ணும் பணிகள் தொடங்கின.

அமெரிக்க செனட் சபையில், ஒபாமாவின் ஜனநாயகக் கட்சி பெரும்பான்மையைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது.

**ரோம்னி வாழ்த்து**

இதேவேளை மீண்டும் வெற்றி பெற்றுள்ள ஒபாமாவுக்கு, மிட் ரோம்னி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற நெருக்கடியான நேரத்தில், அரசியல் மோதல்களுக்கு இடம்கொடுக்காமல், மக்கள் நலனை முன்னிறுத்தி செயல்பட வேண்டியது அவசியம் என்று மிட் ரோம்னி தெரிவித்தார்.

**உலகத் தலைவர்கள் வாழ்த்து**

மீண்டும் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒபாமாவுக்கு, இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, பிரதமர் மன்மோகன் சிங், பிரிட்டன் பிரதமர் டேவிட் கம்ரான் உள்பட பல்வேறு உலகத் நாடுகளின் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். (எ-11)

## வங்கக் ...

டங்களிலும் பலத்த மழை பெய்தது.

பின்னர் அந்தப் புயல் வலுவிழந்து காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறி ஆந்திரா மற்றும் ஒடிசா மாநில கடலோர மாவட்டங்களை நோக்கிச் சென்றதால் அங்கு இன்னும் பலத்த மழை பெய்து வருகிறது. ஆந்திராவில் பல கடலோர மாவட்டங்கள் வெள்ளத்தில் மிதந்து வருகின்றன. இதுவரை அங்கு 37 பேர் பலியாகியுள்ளனர்.

இந்நிலையில் தற்போது வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது. இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் ரமணன் கூறுகையில்,

'நீலம்' புயல் கரை கடந்த பிறகு சில தினங்களாக வானிலையில் எந்த மாற்றமும் இல்லை. தற்போது வங்கக் கடலில் இலங்கை அருகே மன்னார் வளைகுடாப் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை புதிதாக உருவாகி உள்ளது.

இதன்காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகத்தின் தென் மாவட்டங்களில் பலத்த மழை அல்லது மிக பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றார். (எ-11)

## நாட்டின் அபிவிரு...

மாகாண சபைகளின் காரணமாக நாடாளுமன்றத்தின் அதிகாரம் நாளுக்கு நாள் பல வீனமடைந்து வருவதாக அமைச்சர் விமல் வீரவன்ச கூறினார்.

எதிர்காலத்தில் வடக்கு மாகாண சபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வசம் சென்றால், அது அரசாங்கம் கொண்டுவரும் சட்டங்களுக்கு தடையாக அமைய முடியும் என்றும் அவர் கூறினார்.

அந்த மாகாண சபை காணி மற்றும் பொலிஸ் அதிகாரத்தை தமக்கு வழங்குமாறு நீதிமன்றங்களை நாடும் அபாயம் உள்ளதாகவும் அவர் எச்சரித்தார்.

ஆகவே நாட்டின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் மாகாண சபைகளை ரத்துச் செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார். (எ-11)

# சொத்து விபரங்களை பகிரங்கப்படுத்தியது குற்றம்

## சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு

பிரதம நீதியசர் ஷிராணி பண்டாரநாயக்க



பிரதம நீதியசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் சொத்துக்கள் பற்றி விபரத்தை பகிரங்கப்படுத்தியதன் மூலம் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தண்டனை பெறக்கூடிய குற்றம் ஒன்றைப் புரிந்துள்ளதாக சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை வாபஸ் பெறுமாறு கோரி கையெழுத்து வேட்டை ஒன்றை கொழும்பு மேல் நீதிமன்ற வளாகத்தில் தேசிய சட்டத்தரணிகள் சங்கத்தினர் நடத்தினார்கள்.

அப்போது அங்கு செய்தியாளர்களிடம் உரையாற்றிய அந்தச் சங்கத்தின் தலைவரான சட்டத்தரணி உபுல் ஜயசூரிய இந்தக் கருத்தை முன்வைத்தார்.

குற்றவியல் பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட பின்னர், பிரதம நீதியரசரின் வங்கிக் கணக்குகள் மற்றும் சொத்துக்கள் பற்றிய விபரங்கள் பகிரங்கப்படுத்தப்பட்டன என்றும் குற்றவியல் பிரேரணை தாக்கல் செய்யப்பட்ட பின்னர் அது குறித்த விபரத்தை வெளியிட்டமை நாடாளுமன்ற விதிகளின் படி ஒரு குற்றம் என்றும் அவர் கூறினார்.

ஆகவே இந்தக் குற்றத்தைச் செய்த ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக வழக்கு நடத்தி, தண்டனை வழங்க நீதிமன்றங்களுக்கு அதிகாரம் இருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தக்குற்றவியல் பிரேரணை குறித்த விடயங்களைக் கண்காணிக்க சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் அவசியம் என்றும் சட்டத்தரணிகள் அங்கு வலியுறுத்தினார்கள்.

தமது கையெழுத்து வேட்டை நாடு முழுவதும் நடைபெறும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். (எ-11)

## ஜனவரியில் ...

என்பதைக் கண்டறிவதற்காக ஐ.நா.மனித உரிமைகள் ஆணையகத்தின் சார்பில் தனது தலைமையிலான குழு இலங்கைக்கு பயணிக்கவுள்ளது என்று நவநீதம்பிள்ளை அறிவித்துள்ளார்.

ஜெனிவாவுக்கு பயணமாகியுள்ள தி.மு.க பிரதிநிதிகளான மு.க.ஸ்ராலின் மற்றும் டி.ஆர். பாலு ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கைத் தமிழர் விடயம் தொடர்பில் நிறைவேற்றப்பட்டுள்ள டெசோ தீர்மானங்கள் குறித்து ஐ.நா. பொதுச் செயலாளருடன் விவாதித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் நவநீதம்பிள்ளை உறுதியளித்துள்ளார் என்று திமுக தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

## விற்றமின் 'ஏ' மருந்து பாவனை இடைநிறுத்தம்

விற்றமின் ஏ மருந்து பாவனையை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக சுகாதார சேவைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

குருநாகலில் சுகாதார சேவைத் திணைக்கள அதிகாரிகளினால் நடத்தப்பட்ட வைத்திய முகாமொன்றில் விற்றமின் ஏ மருந்து கொடுக்கப்பட்ட 27 மாணவர்கள் சுகவீனமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதனையடுத்தே குருநாகல் மாவட்ட சுகாதார திணைக்களம் குறித்த மருந்து பாவனையை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மருந்துகளில் ஒரு பகுதியை இரசாயன பரிசோதனைக்காக சுகாதார திணைக்களம் அனுப்பி வைத்துள்ளது. (எ-11)

# அதிகாரப் பகிர்வுக் கொள்கை...

நாட்டைப் பிரியுங்கள் என்று சொல்கிறார்.

1980களில் புலிகள் உருவானார்கள். 1987களில் மாகாண சபை முறைமையும் 13ஆம் திருத்தமும் உருவானது.

ஆனால் அதிகாரப் பரவலாக்கல் கொள்கை என்பது இந்த நாட்டின் புலிகளுக்கு முன்னமேயே உருவாகியிருந்ததை தெரிந்தும் தெரியாதது போல் சிறுபிள்ளைத்தனமாக விமல் வீரவன்ச பேசுகிறார் என ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் தெரிவித்தார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப் படுத்துவோம் என்றதலைப்பில் இரண்டாவது ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது.

சுமந்திரன் எம்.பி, அஸாத் சாலி, சிறிதுங்க ஜெயசூரிய, விக்கிரமபாகு கருணாரட்ண ஆகியோரும் கலந்து கொண்ட இந்தச் சந்திப்பில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

இந்த நாட்டின் சரித்திரம் எமக்குத் தெரியாது என விமல் வீரவன்ச நினைப்பது மடத்தனம். நாங்கள் நேற்று முதல் நாள்தான் மீண்டும் பிறந்து வந்துள்ளோம் என அவர் நினைப்பதும் மடத்தனம்.

1940, 1950, 1960களில் இந்த நாட்டில் நடந்தவை எங்களுக்குத் தெரியும்.

எமக்கு நீங்கள் சரித்திர பாடம் புகட்ட வேண்டாம்.

உமது இனவாத தேவைகளுக்காக, அதிகாரப் பரவலாக்கலை எதிர்க்கிறீர். அதற்காக பொய்களை அவிழ்த்து விடுகிறீர்.

புலிகளுக்குப் பயந்துதான் அதிகாரப் பகிர்வுக் கொள்கை என்றால் இன்று அதிகாரப் பகிர்வைப் பெற்றுக் கொள்ள மீண்டும் புலிகள் வரவேண்டுமா?

புலிகள் மீண்டும் எழுந்து வரவேண்டும் என்று விமல் வீரவன்ச சொல்கிறாரா? என நான் கேட்கிறேன்.

தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு என்பது அதிகாரப் பகிர்வு. இதைதான் உலகம் திரும்பத் திரும்பச் சொல்கிறது.

ஆனால் மகிந்த அரசாங்கம் அதிகாரத்தைப் பகிர்ந்து தரத் தயாரில்லை.

பிரதம நீதியரசருக்கு எதிரான பிரேரணை மூலம் அரசாங்கம் உலகத்திற்கு வழங்கிய செய்தி இதுதான்.

இன்று திவிநெகும சட்டம் மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பறிக்கிறது. அதைப் பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையின் மூலம் சட்டமாக்க முடியாது என பிரதம நீதியரசர் தெளிவாக தீர்ப்பு வழங்கி விட்டார்.

ஆகவே வேண்டுமானால் மூன்றிலிரண்டு பெரும்பான்மை மூலம்,13ம் திருத்தத்தில் கைவையுங்கள். சர்வஜன வாக்கெடுப்பு நடத்துங்கள்.

உங்களுக்கு முடியுமானால் திருத்தத்தையே திருத்துங்கள் என்று உயர் நீதிமன்றத் தீர்ப்பு சொல்லிவிட்டது.

இதனால்தான் இவர்களுக்கு இன்று பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீது கடும்கோபம்.

ஏனென்றால் சத்தமில்லாமல் 13இன் மீது கைவைக்க நினைத்தவர்களுக்கு அதை பகிரங்கமாக செய்ய வேண்டிய நிலைமையை பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க ஏற்படுத்திவிட்டார்.

உலகம் முழுக்கப் போய் 13இற்கு மேலே போட்டுத் தருகிறேன் என்று சொன்னவர்கள் இன்று இருப்பதையும் திருட முனைகிறார்கள் என்பது பகிரங்கமாகி விட்டது. (எ- 11)


*The Combined Choirs of the Youth of the North*

*Proudly presents*

*The 61st Annual Festival of Carols*

*Date: Saturday, 10th Nov., 2012*

*Time: 4.00 p.m*

*Venue: St. John's College*

*Admission: By Programme - Rs 20/=*

(C-1459)



**அன்பொளி கல்வியகம்**

யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2012

சித்தியடைந்த மாணவர்களுக்கான

**பரிசளிப்பு நிகழ்வு**

எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 10.11.2012 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ்) நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இயக்குநர்,

ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள்.

(சி-1458)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.